விற்பனையாகிறது
ஜோதிட சிம்மம் புலியூர்பாலு அவர்களின் மகன்
புலியூர் நாகராஜன் பாலு
கணித்து வழங்கும்
குரு பெயர்ச்சி
பலன்கள்
09–12–2008
முதல்
18–12–2009
வரை
விலை
ரூ. 15/-


ஏஜென்ஸி மற்றும் விளம்பரத்
தொடர்புக்கு:
மெலோடி பப்ளிகேஷன்ஸ்
13, தீத்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

# சொர்க்கம் ஹவுஸ்ஃபுல்



## ராஜேஷ்குமார்

# 1

எலக்ட்ரானிக் எஞ்ஜீனியர் திரிவேதி, ஒரு
ரொட்டித் துண்டின் உடம்பு பூராவும் ஜாமைத்
தேய்த்துக் கொண்டே எதிரில் உட்கார்ந்திருந்த -
அந்த இரண்டு நபர்களையும் பார்த்து மெல்லிய
குரலில் கேட்டார்.

"அந்த ஃப்ளைட் சிங்கப்பூர் ஏ
லைன்ஸுக்கு சொந்தமானதா...?"

"ஆமா... ஸார்" - தலையாட்டியவனுக்கு
முப்பது வயதுதான் இருக்கும். கொஞ்சம் சதை
போட்டிருந்தான். பாதி முகத்தை மறைக்கிற
மாதிரி குளிர் கண்ணாடி மாட்டி - முன்புற
வழுக்கையை மறைப்பதற்காக தலைகேசத்தை
பட்டையாய் சீவியிருந்தான். கழுத்திலும்
பிடரியிலும் கணிசமாய் வியர்த்திருந்தான்.

"ஃப்ளைட் என்ன ரகம்...?"

"போயிங்...ஸார். 707 கோல்ட் ஹெவன்..."
சொன்ன இரண்டாவது நபர்க்கும் அதே
வயதுதான் இருக்கும். சதை பிடிப்பில்லாத எலும்பு
முகம். தொண்டைக் குழியில் 'ஆதாம் ஆப்பிள்'
ஓணான் மாதிரி நீட்டிக் கொண்டு தெரிந்தது
மோவாயின் முன்பரப்பில் தாடியை நாற்றங்கால்
மாதிரி வளர்த்து - சிரத்தையாய் ட்ரிம்
செய்திருந்தான். இவனுடைய கண்களிலும் குளிர்
கண்ணாடி தொற்றியிருந்தது.

திரிவேதி ஜாம் தோய்த்த ரொட்டியை வாயில்
திணித்துக் கொண்டே கேட்டார். "ஃப்ளைட்
டோட பேர் என்ன...?"

"கோல்ட் ஹெவன்..."

திரிவேதி சிரித்தார்.



"பேர் நல்லாத்தான் இருக்கு. தமிழ்படுத்திப் பார்த்தா தங்கச் சொர்க்கம்."

"அந்த தங்கச் சொர்க்கத்தைத்தான் தகர்க்கணும் ஸார்."

"உங்களை இங்கே அனுப்பி வெச்சது யாரு...?"

"ஃப்ளைட் மெய்ண்டனன்ஸ் சௌத்ரி...!"

"நீங்க ரெண்டு பேரும் அவர்கிட்டே வேலை பார்க்கிற அஸிஸ்டெண்ட்ஸா?"

"ஆமா... ஸார்..."

"உங்களைப் பத்தி எனக்குத் தெரியாது. யாராவது ஒருத்தர் சௌத்ரிக்கு போன் பண்ணி - அவர் லைன்ல கிடைச்சதும் ரிஸீவரை எங்கிட்ட குடுங்க."

"டெலிபோன்ல... கோல்ட் ஹெவன் சம்பந்தமா எந்த தொடர்பும் வெச்சுக்க வேண்டாம்ன்னு சௌத்ரி சொன்னார்... ஸார்."

திரிவேதி ரொட்டியை விழுங்கிவிட்டு சிரித்தார். "டெலிபோன்ல எப்படி பேசணுமங்கிற விவஸ்தை எனக்கு நல்லாவே தெரியும். சௌத்ரி இப்போ வீட்டில்தானே இருப்பாரு...?"

"ஆமா..."

"பின்னே... போன் பண்ணு..." மேஜையிலிருந்த டெலிபோனை அவன் பக்கமாய் நகர்த்தி வைத்தார். அவன் ரிஸீவரை தயக்கமாய் எடுத்து - டயலைச் சுழற்றினான். மறுமுனையில் ரிங்போய் தொடர்பு கிடைத்ததும் - குரல் கொடுத்தான்.

"ஸார்... நான் குரு..."

"என்ன விஷயம்?"

"மிஸ்டர் திரிவேதி உங்க கூட பேசணுமாம்..."

"இப்போ... எங்கிருந்து பேசறே...?"

"அவரோட பேக்டரி வீடியோ கேம் யூனிட்டிலிருந்து ஸார்."

"சரி... ரிஸீவரை அவர்கிட்டே குடு..." மறுமுனையில் சௌத்ரி சொல்ல - குரு திரிவேதியிடம் ரிஸீவரை நீட்டினான்.

அவர் வாங்கி "ஹலோ" என்றார்.

"மிஸ்டர் திரிவேதி. போன வருஷம் மாதிரியே இந்த வருஷமும் உங்க ஹெல்ப்... எனக்கு வேணும்."

"உங்களுக்கெல்லாம் உதவி பண்ணத் தானே... நான் இருக்கேன்."

"என்னோட அஸிஸ்டெண்ட்ஸ் விஷயத்தை சொன்னாங்களா?"

"சொன்னாங்க... அவங்க ரெண்டு பேரும் உங்க ஆட்கள் தானான்னு தெரிஞ்சுக்கத்தான் போன் பண்ணச் சொன்னேன்."

"சந்தேகமில்லாமே... என்னோட ஆட்கள் தான்."

"இந்த உத்தரவாதம் போதும்... மத்ததை நான் அவங்க கிட்டே பேசிக்கிறேன்."

"தாங்க்யூ..."

"ஒரு விஷயம்...?"

"என்ன...?"

"பண விவகாரம்...?"

"உங்க டிமாண்ட்டை சொல்லுங்க. குருவும் காசிமும்... ஏற்பாடு பண்ணுவாங்க..."

திரிவேதி ரிஸீவரை வைத்துவிட்டு - எதிரே உட்கார்ந்திருந்த குருவையும் காசிமையும் புன்னகையோடு ஏறிட்டார்.



"இனிமே நாம தீர்க்கமா பேசிடலாம். அந்த போயிங் 707 கோல்ட் ஹெவனை தகர்க்கணும் அவ்வளவுதானே?"

"ஆமா... ஸார்."

"என்னிக்கு அந்த சம்பவம் நடக்கணும்?"

"நாளைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு."

"என்ன மெதேட்...?"

"போன வருஷம் டெல்லியில் நடந்த 'போயிங் 176 சக்கரவர்த்தி' வெடி விபத்து மாதிரியே... இதையும் நடத்தணும்..."

"ரிமோட் கண்ட்ரோல் மூலமா வெடிக்க வைக்கணும்?"

"ஆமா..."

"ஃப்ளைட்ல மொத்தம் எத்தனை பேர்...?"

"முன்னூற்றி இருபது பேர்."

"வி.ஐ.பீ.ஸ்...?"

"இருக்காங்க..."

"ஃப்ளைட் ஆகாயத்துல இருக்கும்போது... கீழே இருந்தே ரிமோட் கண்ட்ரோலை இயக்கி ஃப்ளைட்டை வெடிக்க வைக்கிற திட்டம் ரொம்பவும் காஸ்ட்லி... ரொம்பவும் ரிஸ்க்கி.'

"உங்க டிமாண்ட் என்னங்கிறதை நீங்க சொல்லுங்க... பார்ட்டிகிட்டயிருந்து நாங்க வாங்கித் தர்றோம்..."

திரிவேதி ப்ரேக் பாஸ்ட்டை, முடித்துக் கொண்டு - எழுந்து போய் வாஷ்பேசினில் கையைக் கழுவிக் கொண்டே சொன்னார்.

"ஐம்பது லட்சம்."

காசிமும் குருவும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். பின் குரு மட்டும் வாயைத் திறந்தான்.

"ஸார்...! பார்ட்டி சொன்ன அமௌண்டைக் காட்டிலும் இது ரெண்டு மடங்கு அதிகம்..."

"அப்ப... பிசினஸ் வேண்டாம்...! புறப் படுங்க..." டவலால் வாயை ஒற்றிக் கொண்டே வந்து - நாற்காலியில் சாய்ந்தார் திரிவேதி. நெற்றியின் முன்பக்கமாய் வந்து விழுந்த நரை கிராப்பை இரண்டு கைகளாலும் கோதிவிட்டக் கொண்டார். பிறகு எதிரே உட்கார்ந்திருந்தவர் களை ஏறிட்டு பார்க்காமல் - பேப்பர் வெயிட்டை கையில் எடுத்து வைத்து உருட்டியபடியே பேசினார். "ஃபிளைட்டை பாம் பண்றது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா...? அதுவும் ரிமோட் கண்ட்ரோல மூலம் அது ஆகாயத்தில் பறக்கும்போது - வெடிக்கும்படியா பண்றது ஒரு அசாதாரண விஷயம். என்கொய்ரியில் அது வெடி விபத்துன்னு தெரியக்கூடாது. டிவைஸ் ஏரர் மாதிரி காட்டணும். இது கிணத்தை அழகு படுத்தறதுக்காக வெக்கப்படுகிற பாம் இல்லை. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஃபிளைட்டையும் - விலை மதிப்பே இல்லாத உயிர்களையும் சாமர்த்தியமாய் நாசம் பண்ணுகிற அற்புதமான சாதனை இது. இந்த சாதனைக்கு முன்னாடி நான் கேட்ட ஐம்பது லட்சம் பிசாத்து. கோயிலுக்கு முன்னாடி நின்னுட்டிருக்கிற பிச்சைக்காரனுக்கு பத்து பைசா போடற மாதிரி..."

காசிம் குருவிடம் திரும்பினான்.

"குரு...! பார்ட்டி கிட்டே பேசி என்ஜினியர் கேட்ட அமௌண்ட்டை வாங்கி குடுத்துடலாம். பேரம் பேசிட்டிருக்க இது நேரமில்லை..."

"பார்ட்டி தருவாரா...?"

"நான் வாங்கித் தர்றேன்."

குரு திரிவேதியை ஏறிட்டான்.

"ஓ...கே... ஸார்... நீங்க கேட்ட அமௌண்ட்டை பார்ட்டிகிட்டயிருந்து வாங்கித்



தர்றோம். டைம்பாமை ஃபிக்ஸ் பண்ற ப்ரோக்ராமை பேசிடலாமா....?"

"மொதல்ல பாதி பணம் டேபிள் மேல வந்து உட்காரணும்.... அப்புறம்தான் மத்த டீலிங் கெல்லாம்..." திரிவேதி வலது கையின் ஆட்காட்டி விரலால் டேபிளின் மேல் தாளம் போட்டுக் கொண்டிருக்கும்போதே...

மேஜையின் மேலிருந்த இண்டர்காம் குளிரில் நடுங்குகிற மாதிரி கனைத்தது. ரிஸீவரை எடுத்து - "எஸ்" என்றார்.

"...."

"சொல்லுங்க ராஜாராம்."

"...."

"கிரிக்கெட்டியர் வீடியோ கேம்க்கு அவ்வளவு டிமாண்டா?"

"...."

"சரி... ப்ரோக்கிராமர் ஷர்மாவுக்கு இன்ஸ்ட்ரக்ட் பண்ணி அந்த புரொடக்ஷனை மட்டும் கொஞ்சம் ரெய்ஸ் பண்ணுங்க."

"...."

"நோ... நோ... எல்லாத்தையும் நீங்களே பார்த்துக்குங்க. ஒரு பத்து நிமிஷத்துக்கு என்னை எதுக்காகவும் காண்டாக்ட் பண்ணாதீங்க. வெளியே இருந்து எனக்கு கால்ஸ் வந்தா நீங்களே அட்டெண்ட் பண்ணி பேசுங்க."

"...."

ரிஸிவரை வைத்துவிட்டு - மறுபடியும் பேப்பர் வெயிட்டை எடுத்துக் கொண்டார்... திரிவேதி. "இன்னிக்கு சாயந்தரம் ஆறுமணி வரைக்கும் இந்த பேக்டரி யூனிட்ல தான்

இருப்பேன். உங்கள்ல யார் வேணுமின்னாலும் பாதி பணத்தோட வந்து - ஃபர்தரா டீலிங்க் வெச்சுக்கலாம்.''

''ஸார், அதுக்கு முன்னாடி சில சந்தேகங்கள்.''

''ப்ளீஸ்... பணம் மேஜைக்கு வந்த பின்னாடிதான் என்னோட கன்சல்டேஷனையே ஆரம்பிக்க முடியும்.''

குருவும் காசிமும் எழுந்தார்கள்.

''நாங்க சாயந்தரம் ஆறு மணிக்குள்ளே வர்றோம் ஸார்.''

''வாங்க....'' இருவரும் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார்கள். வாசலில் நின்றிருந்த பைக்கை ஆக்ரமித்த போது - காசிம் சொன்னான்.

''என்ன இந்த ஆள்... இவ்வளவு கெடுபிடி பண்றான்?''

''எதிர்பார்த்த கெடுபிடிதான். மெயின்டனென்ஸ் சௌத்ரி ஏற்கெனவே சொல்லித்தான் அனுப்பிச்சார். காசு விவகாரங்கள்ல மனுஷன் ரொம்பவும் கெட்டி...''

''இருந்தாலும் ஐம்பது லட்சம் அதிகம்.''

''பார்ட்டி கிட்டே பேசி வாங்கிடலாம்... வா...''

பைக் சீறிக்கொண்டு புறப்பட்டு - நீளமான அந்த ரோட்டை விழுங்கி திரும்பியது. டெலிபோன் பூத்தொன்று எதிர்பட, பைக் மௌனமானது.

இறங்கி இருவரும் பூத்துக்குள் போனார்கள்.

குரு ரிஸீவரை எடுத்துக் கொண்டு - டயலைச் சுழற்றி - குரல் கேட்டதும் நாணயத்தை போட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டான்.

''ஹலோ....''

''ஸார்... நான் குரு...''



''என்னாச்சு...?'' ஒரு கரகரப்பான குரல் கேட்டது.

''பேசிப் பார்த்தோம் ஸார்.''

''சரி...''

''ஐம்பது ரூபாய் வேணுமாம்.''

''பணத்தைப் பத்தி பிரச்னையில்லை... காரியம் ஒழுங்கா நடக்குமா?''

''அதெல்லாம் துல்லியமா நடக்கும் ஸார்.''

''சரி ஒத்துக்குங்க...''

''இன்னிக்கு சாயந்தரம் ஆறுமணிக்குள்ளே பாதி பணத்தோட வரச் சொல்லியிருக்கார் ஸார்.''

''இன்னிக்கேயா...?''

''ஆமா... ஸார்.''

''ஏற்பாடு பண்றேன்.''

## 2

''சூப்பர் ஸ்டார் சூர்யகலாதரன்.''

''வாழ்க...!''

''நடிப்பரசன் சூர்யகலாதரன்.''

''வாழ்க!''

''எங்கள் அண்ணன்.''

''வாழ்க....'' - வாழ்த்தொலிகள் பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்கு முன்னால் பீறிட்டுக் கொண்டு கிளம்ப - அந்த ரோட்டோரம் முழுவதும் ஏராளமான கார்கள். வெளியூரினின்றும் வந்த புழுதி படிந்த பஸ்கள். பஸ்களின் முன்புறமும்

பின்புறமும் துணி பேனர்கள் ஆடின. தங்கத் தமிழன் சூர்யகலாதரன் நற்பணி மன்றம் - அத்திக்குடி. அன்பு நெஞ்சம் சூர்யகலாதரன் ரசிகர் மன்றம் கோவில்பட்டி. சூராதி சூரன் சூர்ய கலாதரன் நற்சேவைக் குழு - புத்தனாம்பட்டி. பஸ்களின் பின்புறம் ஆளுயரச் சுவரொட்டிகள்.

இன்று இருபத்தெட்டாவது பிறந்தநாள் காணும் அண்ணன் - வசூல் மாமன்னன் - சூரியகலாதரனை - வாழ்த்தி வணங்குகிறோம்.

கடலுக்கும் கரையுண்டு.

உன் நடிப்புக் கடலுக்கு கரையேது?

சூரியனுக்கும் அஸ்தமனம் உண்டு.

ஆனால் - சூர்யகலாதரா! உனக்கு

என்றும் உதயம்தான், எங்கள்

இதயங்களை உன் காலடியில் கொட்டு கிறோம்

எங்கள் இதயங்கள் மிதிபடட்டும் - ஆனால்

உன் பாதங்கள் மட்டும் வலிக்கவே கூடாது.

- இப்படிக்கு உன்மேல் அன்பை மட்டுமே காட்டத் தெரிந்த ரசிக உள்ளங்கள். காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே நின்றிருந்த ரசிகர்கள் இன்னமும் தொண்டை கிழிய கத்திக் கொண்டிருந்தார்கள்.

''மதுரை தந்த மாணிக்கம்.''

''வாழ்க!''

''கலையுலகின் காவல் தெய்வம்.''

''வாழ்க...!'' - கோஷங்களுக்கு மத்தியில் - திடீரென்று கும்பலில் பரபரப்பு. யாரோ போர்டிகோவை கை காட்டினார்கள்.

''அண்ணன் வர்றாரு... அண்ணன் வர்றாரு...'' கைதட்டல் குபீரென்று கிளம்ப -



எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஓடினார்கள்.

சூரியகலாதரன், பங்களாவுக்கு உள்ளே யிருந்து - நிருபர்கள் புடை சூழ வெளியே வந்து கொண்டிருந்தான். நான்கைந்து வீடியோ காமிராக்களின் உஷ்ணமான வெளிச்சம் அவன் மேல் விழுந்திருந்தது. ஃப்ளாஷ் காமிராக்கள் கும்பல் கும்பலாய் கண் சிமிட்டின.

சூர்யகலாதரன் பட்டு வேஷ்டி பட்டு சட்டையில் - நெற்றியில் விபூதி குங்குமம் மின்ன, எல்லோரையும் பார்த்து கை குவித்தான்.

ரசிகர்களுக்கு மத்தியிலிருந்து விசில் சத்தமும் கைதட்டலும் கிளம்பியது. நிருபர்கள் பேனாவும் பேப்பருமாய் சூர்யகலாதரனை நெருக்கமாய் சூழ்ந்து கொண்டு கேள்விகளை கேட்க ஆரம்பித்தார்கள்.

''உங்கள் பிறந்தநாள் செய்தி என்ன...?''

''தமிழ் வாழ வேண்டும். தமிழ் மக்கள் வாழ வேண்டும். இல்லாமை ஒழிய வேண்டும். இன்பம் பெருக வேண்டும்.''

''உங்களின் இவ்வளவு பெரிய புகழுக்கு காரணம் யார்...?''

''நான் அன்றாடம் வழிபடும் சௌடேஸ்வரி அம்மன்.''

''உங்களின் உழைப்பு மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

''வெறும் உழைப்பு புகழைக் கொண்டு வராது. பணத்தைக் கொண்டு வராது. தெய்வத்தின் கடாட்சம் இருந்தால்தான் இதெல்லாம் சாத்தியம்...''

''உங்களுடைய பிறந்த நாளை இந்த வருடம் இவ்வளவு சிறப்பாய் கொண்டாடுவதற்கு என்ன காரணம்?''

"என் பிறந்த நாளை நான் கொண்டாட வில்லை. என் அன்பு ரசிகர்கள் கொண்டாடு கிறார்கள். இந்த விழா கொண்டாட்டமெல்லாம வேண்டாம்ன்னுதான் சொன்னேன். அவர்கள் கேட்கலை. சென்னை தலைமை ரசிகர் மன்றத் தலைவர் சிவநாதன் தான் இந்த ஆர்ப்பாட்டத் துக்கெல்லாம் காரணம்..."

"பிறந்த நாளையொட்டி என்னென்ன செய்யப் போகிறீர்கள்?" இந்த கேள்விக்கு சூர்யகலாதரன் பதில் சொல்வதற்குள் - ரசிகர் மன்றத் தலைவர் சிவநாதன் குறுக்கிட்டு சொன்னார். "சிறைக் கைதிகளுக்கு ஸ்வீட் பழம் விநியோகம். அண்ணனின் இருபத்தெட்டாவது வயதைக் குறிக்கும் வகையில் - இருபத்தெட்டு ஏழைப் பெண்களுக்கு சேலைகளை கொடுக்கிறோம். மத்தியானம்... ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு சாப்பாடு..."

ரசிகர் மன்றத் தலைவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - காம்பௌண்ட் கேட்டுக்குள் அந்த கன்டேஸா கார் நுழைந்து - கும்பலை நோக்கி மெதுவாய் ஊர்ந்து வந்தது. சூர்யகலாதரனின் அருகில் நின்றிருந்த அவனுடைய உதவியாளர் கஜேந்திரன் காதைக் கடித்தான்.

"அண்ணே...! ப்ரொட்யூஸர் நிர்மல்கோஷ் வர்றார்."

"கார் புதுசு மாதிரி இருக்கு..."

நிர்மல்கோஷ் பளபளா வழுக்கை மண்டை யோடும், கையில் ஒரு ரோஜா மாலையோடும் - காரினின்றும் இறக்கி - சூர்யகலாதரனை நோக்கி வந்தார்.

"மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப்... த... டே..." சொல்லி கோல்ட் ப்ளேம் செண்ட் வாசனையோடு அவனைக் கட்டித்தழுவி -



கன்னத்தில் முத்தமிட்டு - இதழ்கள் உதிர உதிர அவன் கழுத்தில் ரோஜா மாலையைப் போட்டார்.

எல்லோரும் கைகளைத் தட்டினார்கள்.

கைதட்டல் ஓய்ந்ததும் -

நிர்மல்கோஷ் தொண்டையை கனைத்துக் கொண்டு - மெல்லிய குரலில் - அங்கேயிருந்த கும்பலைப் பார்த்தபடி பேசினார்.

"நான் தயாரிக்கவிருக்கிற 'உனக்கு நிகர் நீயே!' என்னும் படத்தில் சூர்யகலாதரன் அவர்கள் ஹீரோவாக நடிக்க இருப்பது பற்றி உங்களுக் கெல்லாம் தெரியும். முழுக்க முழுக்க வெளி நாடுகளில் தயாரிக்கப்படும் படம் அது. சூர்யகலாதரன் இன்றைக்கு தமிழ்ப்பட உலகில் நெம்பர் ஒன் ஹீரோ. அவர் நடித்த படமென்றால் தியேட்டர்களில் கூட்டம் அலைமோதும். ஒரு படம் நூறு காட்சி ஓடினாலே... பந்தா காட்டும் நம் நடிகர்களுக்கு மத்தியில் - பல சில்வர் ஜூப்ளி படங்களைத் தந்த சூர்யகலாதரன... அடக்கமாக இருக்கிறார். அந்த அடக்கமே அவர்க்கு பெரிய சொத்தாக இருக்கிறது. நாளைக்கு நானும் அவரும், படக் குழுவினரும் படப்பிடிப்புக்காக... வெளிநாடு கிளம்பறோம். அதையொட்டியும் - அவருடைய பிறந்த நாளையொட்டியும் எங்கள் நிர்மல் ப்ரொடக்ஷன் சார்பில் - இந்த காண்டேசாக் காரை பரிசாக அளிக்கிறேன். என் சந்தோஷத்திற் காக அவர் காரை ஓட்டிப் பார்க்க வேண்டுகிறேன்."

கைதட்டல் அதிர -

கார்ச் சாவியை சூர்யகலாதரனை நோக்கி நீட்டினார் நிர்மல்கோஷ். சூர்யகலாதரன் சங்கோஜப்பட்டான். "இதெல்லாம்... எதுக்கு ஸார்...?"

"ம்... வாங்க... காரை ஓட்டிப் பாருங்க..."

நிர்மல்கோஷ் இழுத்துப்போய் - சூர்ய கலாதரனை ட்ரைவிங் சீட்டில் உட்கார வைத்து - தானும் பக்கத்தில் அமர்ந்தார்.

காமிராக்கள் பிளாஷ்ஷடித்தன.

''ம்... ஸ்டார்ட் பண்ணுங்க...''

சூர்யகலாதரன் காரின் இக்னீஷியனை உசுப்பி - மெதுவாய் நகர்த்த - கும்பல் கைதட்டி வழிவிட்டது. கார் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டி ரோட்டில் பாய்ந்தது.

ஸ்டீயரிங்கை கையாண்டு கொண்டே அவன் நிர்மல்கோஷை திரும்பிப் பார்த்தான். ''எதுக்கு ஸார்... இவ்வளவு காஸ்ட்லியான பிரெஸண்ட்...?''

''இருக்கட்டுமே...''

''ரொம்பவும் பெருமை படுத்திட்டீங்க.''

''நீங்க என்னோட படத்துக்காக - மத்த கால்ஷீட்டுகளையெல்லாம் தள்ளி வெச்சுட்டு ஒரு மாச காலம் கால்ஷீட் குடுத்திருக்கீங்க. அந்த தாராள மனசுக்கு முன்னாடி இந்த கார் பிரஸண்டேஷனெல்லாம் ஒண்ணுமேயில்லை.''

''நாளைக்கு நமக்கு எத்தனை மணிக்கு ஃப்ளைட்?''

''சாயந்தரம் ஆறு மணிக்கு போயிங் செவன் நாட் செவன் கோல்டன் ஹெவன்ல ரிசர்வ் ஆயிருக்கு. எல்லா டிக்கெட்ஸும் மேனேஜர் கிட்டதான் இருக்கு.''

''படப்பிடிப்புக்காக மொத்தம் எத்தனை பேர் வரப்போறாங்க...?''

''டெக்னீஷியன்கள் உள்பட மொத்தம் நூத்தி நாற்பது பேர்...''

''மை குட்னஸ்! ஏன் ஸார்...? இந்த சப்ஜெக்ட்டை நம்ம இந்தியாவில பண்ண முடியாதா...?''



''பண்ணலாம். ஆனா படத்துல ரிச்னெஸ் இருக்காது. அதுவுமில்லாமே வெளிநாட்டுலதான் படப்பிடிப்புன்னு சொல்லி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் கிட்டயிருந்து பணத்தை வாங்கியிருக்கோம்.''

சூர்யகலாதரன் காரைத் திருப்பிக் கொண்டே கேட்டான். ''நான் நாளைக்கு ஏர்ஃபோர்ட்டுக்கு எத்தனை மணிக்கு வரணும்?''

''மத்தியானம் மூணு மணிக்கெல்லாம் ஏர்ஃபோர்ட்ல இருக்கணும்?''

''எனக்கு நாளை மத்தியானம் ரெண்டு மணி வரைக்கும் ஏவிஎம்ல ஷூட்டிங் இருக்கு... அதை முடிச்சிட்டுத்தான் வரணும்.''

''மூணு மணிக்குள்ளே ஏர்ஃபோர்ட்டுக்கு வந்துட்டா பரவாயில்லை. அங்கே இருக்கிற ஏகப்பட்ட பார்மாலிடீஸை... முடிச்சுகிட்டு... ஃப்ளைட்டுக்குள்ளே போய் உட்கார்றதுக்குள்ளே வாழ்க்கை வெறுத்துடும்...''

ஃப்ளைட்டுக்கு ஏதோ ஒரு பேரைச் சொன்னீங்களே? அது என்ன...?''

''கோல்டன் ஹெவன். அற்புதமான போயிங். மாஸ் 707. ஃப்ளைட்டுக்குள்ளே நுழைஞ்சா... நிஜமாவே சொர்க்கம்தான். சினிமா செட் போட்ட மாதிரி ஒரு பிரமிப்பு. சிங்கப்பூர் ஏரோநாடிகல் இண்டஸ்ட்ரியில் உருவாக்கிய அற்புதமான சொர்க்கம் அது. ட்வின் என்ஜின்ட் புரோமோடைப்... அபார வேகம். நான் ரெண்டு தடவை அதுல ஜர்னி பண்ணியிருக்கேன். கோல்டன் ஹெவன்ல பறந்தவங்களுக்கு மத்த ஃப்ளைட்ல உட்கார முடியாது... ஹாரிபிள்...''

சூர்யகலாதரன் சிரித்தான்.

''உங்க படப்பிடிப்புக்காக இல்லைன்னாலும் அந்த கோல்டன் ஹெவன்ல பறக்கிறதுக்காக வாவது நான் வெளிநாட்டுக்கு வரவேண்டியது தான்...''

கார் பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்தது. உள்ளே காத்திருந்த ரசிகர்கள் காரைப் பார்த்ததும் மறுபடியும் கத்த ஆரம்பித்தார்கள்.

''அண்ணன் சூர்யகலாதரன்.''

''வாழ்க...!''



## 3

**சா**யந்தரம் மணி ஆறு.

குருவும் காசிமும் ஒரு ப்ரீப்கேஸோடு - திரிவேதியின் அறைக்குள் நுழைந்தார்கள். ஸ்பாட் லைட்டின் உதவியோடு ரிமோட் காண்ட்ரோலர் ஒன்றைக் கிளறிக் கொண்டிருந்த திரிவேதி புன்னகையோடு தலையாட்டினார்.

''என்ன, பணத்தைக் கொண்டு வந்தீங்களா?''

''ம்..''

''எவ்வளவு?''

''இருபத்தைந்து'' - என்று சொல்லிக் கொண்டே ப்ரீப்கேஸை அவர் முன்னால் வைத்தான் குரு. திரிவேதி ஸ்பாட் லைட்டை அணைத்துவிட்டு - ப்ரீப்கேஸைத் திறந்தார்.

கரன்ஸி மணம் கமழ - உள்ளே ஐந்நூறு ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் - ப்ரீப்கேஸ் முழுக்க 'திம்'மென்று உட்கார்ந்திருந்தது.

ப்ரீப்கேஸை மறுபடியும் லாக் செய்து - மேஜைக்கு கீழே தள்ளிவிட்டு நிமிர்ந்தார். ''இனிமே பேசலாம்...''

குரு மேஜையின் மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டான். மெல்லிய குரலில்



www.cleanindians.com

சொன்னான். ''அந்த போயிங் 'கோல்டன் ஹெவன்' ஆயிரக்கணக்கான பீஸ்களா சிதறணும். அது நாசவேலைதான்னு யாரும் சந்தேகிக்கக்கூடாது. இந்த ரெண்டு விஷயத்தையும் மனசுல வெச்சுக்கிட்டு - நீங்க டைனமைட்டை செட் பண்ணித் தரணும்...''

திரிவேதி மேஜையிலிருந்த சிகரெட் கேஸை எடுத்து - சிகரெட் ஒன்றை உதட்டுக்குக் கொடுத்துக் கொண்டே கேட்டார்.

''உங்க ஏர்கிராப்ட் மெயின்டெனன்ஸ் சௌத்ரிக்கு என்னைப் பத்தி - நல்லாத் தெரியுமே...? அவர் ஒண்ணும் சொல்லலையா...?''

''சொன்னார்.''

''பின்னே ஏன்... எம்மேல சந்தேகம்...? அந்த கோல்ட் ஹெவன் பத்து கிராம் எடையில் சின்னச்சின்ன பீஸா வெடிக்கிற மாதிரி டைனமைட்டை நாஸ் செட் பண்ணித் தர்றேன். அதை அப்படியே கொண்டு போய் - ஃப்ளைட்ல பொருத்த வேண்டியது உங்க பொறுப்பு. டைனமைட் பொருத்தப்பட்ட ஃபிளைட் ஆகாயத்துல தவ்வி - வங்காளக் கடலுக்கு நேரே அஞ்சாயிரம் அடிக்கு மேலே பறக்கும்போது - பீச் ரோட்ல காரை நிறுத்திகிட்டு - பின்சீட்டுக்கு வசதியா சாய்ஞ்சு உட்கார்ந்துகிட்டு - ரிமோட் கண்ட்ரோல்ல இருக்கிற பார்ஸ்ட் பட்டனைத் தட்டிவிட்டாப் போதும்... ஃபிளைட் கொத்துக்கறி ஆயிடும். அது நாசவேலைதான்னு கண்டுபிடிக்க ஸ்காட்லாண்ட்லயிருந்து க்ரைம் ப்ராஞ்ச் படை வந்தாலும் முடியாது.'' நீளமாய் பேசிவிட்டு லைட்டரால் சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டார் திரிவேதி.

காசிம் கேட்டான்.

''செட் பண்ணின டைனமைட் எங்க கைக்கு எப்போ கிடைக்கும்?''

''நாளைக்குக் காலையில் ஆறு மணிக்கு.''

''ரிமோட் கண்ட்ரோல்...?''

''அது என்கிட்டதான் இருக்கும். அதை ஆபரேட் பண்ண வேண்டிய பொறுப்பு எனக்குத்தான்...''

''தாங்க்யூ... ஸார். நாளைக்குக் காலையில ஆறு மணிக்கு நாங்க வர்றோம்...'' குருவும் காசிமும் எழுந்தார்கள்.

''ஒரு நிமிஷம்...!''

சிகரெட் புகைந்து கொண்டிருந்த கையை உயர்த்தினார் திரிவேதி. ''உட்காருங்க... எனக்கு சில சந்தேகங்கள் இருக்கு...''

''சந்தேகமா...?''

''எஸ்...! நான் செட் பண்ணித் தர்ற டைனமைட்டை அந்த 'கோல்டன் ஹெவன்' ஃப்ளைட்ல எப்படி பொருத்துவீங்க? மெட்டல் டிடெக்டர்ஸ் வெச்சு ஃபிளைட்டை ஒத்தி எடுத்தா - டைனமைட் இருக்கிற இடம் வெட்ட வெளிச்சமாயிடுமே...?''

''கைவம் ஒரு திட்டம் இருக்கு ஸார்.''

''திட்டமா...? என்ன திட்டம்...''

குருவும் காசிமும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

திரிவேதி சிகரெட் புகை வாயோடு சிரித்தார்.

''சௌத்ரிக்கும் எனக்கும் விசுவாசமான நட்பு இருக்கு. உங்க திட்டத்தை எனகிட்டே தாராளமா சொல்லலாம்...''

''சொல்லிடு குரு...'' - என்றான் காசிம்.

குரு உட்கார்ந்து கொண்டு - நாக்கால் உதடுகளை நீவி ஈரப்படுத்திக்கொண்டு பேச



ஆரம்பித்தான். ''ஸார்... நாளைக்கு மத்தியானம் ஒரு மணி சுமார்க்கு போயிங் 707 கோல்டன் ஹெவனை ரன்வேயிலிருந்து டொமஸ்டிக்கிற்கு கொண்டு போவோம். சௌத்ரி தலைமையில் மெயின்டனென்ஸை நாங்கதான் கவனிப்போம். டாய்லெட் ரூம், லெட்ரின் எல்லாவற்றையும் சரிபார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு. ஏறக்குறைய ரெண்டு மணி நேரம் ஃப்ளைட் டொமெஸ்டிக்கிற்குள்ளே எங்க கஸ்டடியில்தான் இருக்கும். அந்த ரெண்டு மணி நேரத்துக்குள்ளே தான் நீங்க செட் பண்ணித்தர்ற டைனமைட்டை ஃபிக்ஸ் பண்ணப் போறோம்.''

''எப்படி...?''

திரிவேதி சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு தேய்த்தார்.

குரு தொடர்ந்தான். ''விமானத்தில் இருக்கிற டாய்லெட்டுகளில் - கழிவுப் பொருள்களை வெளியே தள்றதுக்காக குழாய் ஒண்ணு இருக்கும். இந்தக் குழாயிலிருந்து வெளியே வரும் கழிவுகளைச் சேகரிக்க - உள்ளேயே டேங்க் மாதிரி ஒண்ணு இருக்கும்.''

''தெரியும்.''

''குழாயின் அடிப்பகுதியில் இருக்கிற அந்த சின்ன டேங்குக்குக்குள்ளே டைனமெட்டை ஃபிக்ஸ் பண்ணி - உட்புறமா இருக்கிற ஸ்க்ரூக்களை டைட் பண்ணி மறைச்சுடப் போறோம். டாய்லெட் போகிற நபர் இதையெல்லாம் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு பக்காவா பண்ணிடுவோம்.''

''கொஞ்சம் புத்திசாலித்தனமான திட்டம் தான்...'' திரிவேதி தலையை ஆட்ட, காசிம் தொடர்ந்தான்.

''டாய்லெட் ஸிங்க் போறதுக்குள்ளே எது இருந்தாலும் மெட்டல் டிடெக்டரினாலே கண்டுபிடிக்க முடியாது.''

''இந்தத் திட்டத்தைப் போட்டுக் கொடுத்தது யாரு...?''

''சௌத்ரிதான்.''

''எனக்கு பணம் கொடுக்கப் போகிற பார்ட்டி யாரு...?''

''அது மட்டும் வேண்டாம்... ஸார்.''

''ஏன்... எனக்குத் தெரிஞ்சா என்ன...?''

''பார்ட்டி தன்னை வெளிப்படுத்திக்க விரும்பலை.''

''ஓகே... அந்த 'கோல்டன் ஹெவன்' ஃப்ளைட்ல ட்ராவல் பண்ணப் போகிற வி.ஐ.பீஸ் யார் யார்ன்னு சொல்ல முடியுமா?''

''ஒரு சின்ன பட்டியலே இருக்கு ஸார்.''

''சொல்லு...''

''முதல் வி.ஐ.பி. சூப்பர் ஸ்டார் சூர்ய கலாதரன்.'''

## 4

அப்பல்லோ ஹாஸ்பிடல்.

இரவு மணி பத்து.

ஆபரேஷன் வார்டுக்கு எதிரே - கண்களில் கண்ணீரோடு ஒரு சின்ன கும்பல், கும்பலின் மத்தியில் தாரிகா அதிகபட்ச கண்ணீரோடும் - வாயில் பொத்தின சேலையோடும் தெரிந்தாள். துக்கம் அதிகப்படும் போது - ஒரு சின்ன கேவலோடு முதுகு குலுங்கினாள். பக்கத்தில் நின்றிருந்த பெரியவர் ஒருவர் அந்தப் பெண்ணிடமிருந்து கேவல் சத்தம் வெளிப்படும் போதெல்லாம்... ''பயப்படாதேம்மா... உம்



புருஷனுக்கு ஒண்ணும் ஆகாது...'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''அப்பா! அவர்க்கு ஏதாவது ஒண்ணு ஆயிட்டா... நான் உயிரோட இருக்க மாட்டேன்'' - தாரிகா பீறிட்டு வந்த அழுகையை அடக்கியபடி சொன்னாள்.

ஆபரேஷன் வார்டு கதவு லேசாய் திறந்தது.

டாக்டர் ஒருவர் சோர்வாய் வெளிப்பட்டார்.

தாரிகாவும் அவளுடைய அப்பா சந்திர சேகரும் அவரை நோக்கி ஏறக்குறைய ஓடினார்கள். ''டாக்டர்...''

''என்னோட ரூமுக்கு வாங்க...''

சொல்லிவிட்டு - அவர் வராந்தாவில் நடக்க - இருவரும் தவிப்பாய் தொடர்ந்தார்கள். தாரிகா பதட்டமாய் கேட்டாள்.

''டாக்டர்! அவரோட உயிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே?''

''என்னோட ரூமுக்கு போய் பேசிக்கலாம் வாம்மா...''

இரண்டு நிமிஷ நடை.

டாக்டரின் அறைக்குள் நுழைந்தார்கள். டாக்டர் ஃபேனைச் சுழல வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டே - எதிரே இருந்த நாற்காலிகளைக் காட்டினார்.

இருவரும் உட்கார்ந்து -

டாக்டரின் முகத்தையே பார்க்க - அவர் சலனமற்ற பார்வையோடு கேட்டார். ''மிஸ்டர் சந்திரசேகர்! உங்க பொண்ணுக்குக் கல்யாணமாகி எவ்வளவு நாளாச்சு?''

''இன்னிக்கு பத்தாவது நாள் டாக்டர்...''

டாக்டர் அதிர்ச்சியோடு நிமிர்ந்தார்.

''பத்து நாளா?''

''எஸ்...''

''லவ் மேரேஜ்ஜா... அரேன்ஜ்ட் மேரேஜ்ஜா?''

''அரேன்ஜ்ட் மேரேஜ்தான்...''

''மாப்பிள்ளைக்கு எந்த ஊரு?''

''திருச்சி...''

''பொண்ணைக் கட்டித்தரும் போது - மாப்பிள்ளைப் பையனைப் பத்தி நீங்க நல்லா விசாரிக்கலைன்னு தெரியுது...''

''டாக்டர், நீங்க என்ன சொல்றீங்க?''

''மாப்பிள்ளைப் பையனுக்கு ரொம்ப நாளாவே நெஞ்சு வலி இருந்திருக்கணும். ஹார்ட் ரொம்பவும் வீக்... இருதய வால்வு ஒண்ணுல அடைப்பு இருக்கு... ஹார்ட் 'பல்ஜிங்' ஆகவும் வாய்ப்பிருக்கு...''

தாரிகா நிலை குத்தினாள்.

''டா...டாக்டர்...''

''இன்னும் ரெண்டு நாள்ல ஒரு ஆபரேஷனை பண்ணியாகணும்...''

''ப...ப... பண்ணிடுங்க டாக்டர்...''

''இந்த வகையான ஆபரேஷன்களை பண்ணக்கூடிய டாக்டர் கோரே இப்போ மெட்ராஸ்ல இல்லை. சிங்கப்பூர்ல இருக்கார். அவர் அடுத்த வாரம்தான் மெட்ராஸுக்கு வருவார். அவர் வருகிற வரைக்கும் பேஷண்ட்டை இங்கே வெச்சிருக்கிறது ரிஸ்க்...''

''அப்படீன்னா...?'' சந்திரசேகர் இழுத்தார்.

''பேஷண்ட்டை சிங்கப்பூர் கொண்டு போய் - அங்கே ஆபரேஷனை பண்ணிட்றது பெட்டர். நான் சொன்னால் டாக்டர் கோரே இந்த ஆபரேஷனுக்கு ஒத்துக்குவார். பேஷண்ட்டை



அங்கே கொண்டு போக உங்களுக்கு விருப்பமா?''

''எங்களுக்கு விருப்பம்தான் டாக்டர்...''

''கிட்டத்தட்ட ஐந்து லட்சம் ரூபாய் வரைக்கும் செலவாகும்.''

''பணம் ஒரு பிரச்சனையில்லை டாக்டர்... பட்... அந்த ஆபரேஷனுக்குப் பின்னாடி மாப்பிள்ளையோட உயிர்க்கு எந்த ஆபத்தும் வராதே?''

''நெவர்... டாக்டர் கோரே இது மாதிரியான ஆபரேஷன்களை நிறைய பண்ணியிருக்கார். அவங்க எல்லோருமே ஹெல்த்தியா இருக்காங்க... நோ ப்ராப்ளம்... கோரே அந்த ஆபரேஷனை பண்ணின பின்னாடி - உங்க மாப்பிள்ளையோட உயிர்க்கு நான் உத்திரவாதம் தர்றேன்... போதுமா?''

''தாங்க்யூ டாக்டர்... பேஷண்ட்டோடு சிங்கப்பூருக்கு யார் யார் போகலாம் டாக்டர்?''

''உங்க டாட்டரும் நீங்களுமே போலாம். நாளைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு 'கோல்டன் ஹெவன்' போயிங் இருக்கு. ஏர் ஃபோர்ட் அதாரிடீஸுக்கு போன் பண்ணித் தகவலைச் சொன்னா... பேஷண்ட்டை அவங்களே வந்து ரிலீஸ் பண்ணிக்குவாங்க. ஏர் ஃபோர்ட்டுக்கு போன் பண்ணட்டுமா?''

''பண்ணுங்க டாக்டர்...''

## 5

மறுநாள் காலை ஆறு மணி.

குருவும் காசிமும் திரிவேதியின் எலக்ட்ரானிக்ஸ் யூனிட்டிற்கு போனபோது - அவர் ஒரு

பால்யூர்தீன் பையில் தயாராய் பேக் செய்து வைத்திருந்த டைனமைட் சமாச்சாரத்தைக் காட்டினார். சொன்னார்.

''இந்த ரிமோட் கண்ட்ரோலுக்கு கட்டுப்பட்ட டைனமைட்டை செட் பண்ண எனக்கு பத்து மணி நேரம் ஆச்சு. ராத்திரி முழுக்கத் தூக்கமில்லை.''

குரு கேட்டான்.

''இதை இங்கே பிரிச்சுப் பார்க்கலாமா ஸார்...?''

''வேண்டாம். யூனிட்டுக்கு ஆட்கள் வர்ற நேரம் இது. நீங்க ரெண்டு பேரும் உடனடியா கிளம்பிப் போயிடறது பெட்டர். பை... த... பை... இதை ஏர்ஃபோர்ட்டுக்குள்ளே எப்படிக் கொண்டு போவீங்க?''

''அந்தப் பொறுப்பு சௌத்ரிக்கு ஸார்... இதைக் கொண்டு போய் - அவர் வீட்ல குடுத்துடுவோம். அவர் ஏர்ஃபோர்ட்டுக்கு கொண்டு வந்திடுவார்...''

திரிவேதி சிரித்தார்.

''சௌத்ரி இது மாதிரியான வேலைகளுக்கு சரியான ஆள். அவரை நம்பிஎந்தக் காரியத்திலும் தாராளமாய் இறங்கலாம்'' சொன்னவர் மேஜையின் இழுப்பறையைத் திறந்து - அந்த கிரிக்கெட்டியர் வீடியோ கேமை எடுத்து வைத்தார்.

''இதுதான்... டைனமைட்டை வெடிக்க செய்யப்போகிற ரிமோட் கண்ட்ரோல். யாருக்கும் எந்த சந்தேகமும் வந்துடக் கூடாதேங்கிற காரணத்துக்காகத்தான் இதை ஒரு வீடியோ கேம்ல செட் பண்ணியிருக்கேன். ஏர் ஃபோர்ட்டுக் குள்ளேயே... தாராளமா இதை கையில வெச்சுக்கிட்டு திரியலாம்...''

குருவும் காசிமும் அந்த ரிமோட் கண்ட்ரோலை பார்த்தார்கள். 'கிரிக்கேட்டியர் வீடியோ



கேம்' என்று ஆங்கிலத்தில் எழுத்துக்கள் தெரிய - ஒரு பாக்கெட் ட்ரான்சிஸ்டரைக் காட்டிலும் கொஞ்சம் பெரிதான சைஸில் அது தெரிந்தது. நடுவே ஒரு திரை போர்டு. அதில் இண்டியன் டீம் - பாகிஸ்தான் டீம் என்று பிரிக்கப்பட்டு, இரண்டு பக்க ஆட்டக்காரர்களின் பெயர்கள் தெரிந்தது. கண்ட்ரோலின் இடது பக்க ஓரத்தில் வரிசையாய் பட்டன்கள். ப்ளே - ரன்ஸ் - அவுட் - சிக்ஸர் - க்ளோஸ்டு.

திரிவேதி தொடர்ந்தார். ''இது வழக்கமான ஒரு வீடியோ கேம் ஆபரேட் பட்டன்ஸ். இதுக்கு கீழே எக்ஸ்ட்ராவா தெரியுதே ஒரு பட்டன்...''

குருவும் காசிமும் எட்டிப் பார்த்தார்கள்.

''இதுதான்... டைனமைட்டை வெடிக்கச் செய்யப் போகிற ப்ரஸ்ட் பட்டன். இதை அஞ்சு தடவை பிரஸ் பண்ணினா போதும் - டைனமைட் வெடிக்கும்...''

''இப்போ பிரஸ் பண்ணினாலும் வெடிக்குமா ஸார்...''

''அற்புதமா வெடிக்கும்... நீங்களும் நானும், இந்தக் கட்டிடமும் - பக்கத்துல இருக்கிற கட்டிடங்களும் - ரெண்டே செக்கண்ட்ல பீஸ் பீஸா போயிடுவோம்...''

''இதை ஆபரேட் பண்ணப் போறது நீங்களா? நாங்களா... ஸார்...?''

''நானேதான்! ஃபிளைட் எத்தனை மணிக்கு புறப்பாடு...?''

''சரியா ஆறு மணிக்கு ஸார்...''

''நான் அஞ்சு மணிக்கெல்லாம் மீனம்பாக்கம் ஏர் ஃபோர்ட்டைத் தாண்டி கடற்கரையோரமா... காரை நிறுத்திக்கிட்டு காத்திட்டிருப்பேன், ஃபிளைட் புறப்பட்டு - ஒரு நல்ல உயரத்திற்கு - கடல் மேல வந்ததும் - பட்டனை அஞ்சு தடவை அழுத்தி அழகா வெடிக்க வைப்பேன்...''

''ஸார்... ஒரு சந்தேகம்...''

''என்ன?''

''இந்த பட்டனை ஒரு தடவை மட்டும் அழுத்தினா டைனமைட் வெடிக்காதா?''

''வெடிக்க்ாது. ஆனா ஒரு தடவை அழுத்திட்டா... டைனமைட் வெடிக்கும்போது நாலு தடவை அழுத்தினா போதும். நம்ம பாதுகாப்புக்காகத்தான் இந்த மெதட். பட்டனை ஒரு தடவை அழுத்தினாலே டைனமைட் வெடிக்கக்கூடிய சாத்தியத்தில் இருந்தா... நானேகூட கை தவறி பட்டனை பிரஸ் பண்ணலாம். அதுக்காகத்தான் இந்த ஃபைவ் டைம்ஸ் மெதட்...''

குருவும் காசிமும் - பால்யூர்தீன் பேப்பரில் பேக் செய்யப்பட்ட டைனமைட்டை எடுத்து - கொண்டு போயிருந்த ப்ரீப்கேஸுக்குள் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

''சௌத்ரிகிட்டே ஏதாவது சொல்லணுமா ஸார்?''

''எதையும் சொல்ல வேண்டாம்...''

''மீதிப்பணம் ஸார்?''

''ஃப்ளைட் அமோகமா வெடிச்சு ஜல சமாதி ஆன பின்னாடி கொண்டு வந்து கொடுத்தாப் போதும்...''

''தாங்க்யூ ஸார்... நாங்க வர்றோம்...''

ப்ரீப்கேஸோடு எழுந்தார்கள்.

''ஒரு நிமிஷம்...''

கையமர்த்தினார் திரிவேதி. ''ஃப்ளைட்டுக்குள்ளே டைனமைட் பொருத்தினதை அதிகாரிகள் கண்டுபிடிச்சிட்டா... என்ன பண்ணுவீங்க...?''



''நிச்சயமா உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் ஸார்...''

''முட்டாள் மாதிரி பேசாதே... என்னைக் காட்டித் தர்றதும் காட்டித் தராததும் ஒரு புறம் இருக்கட்டும்... அந்த சிக்கலை சமாளிக்க என்ன பண்ணுவே...?''

குரு திணறினான்.

''எ...எனக்கு ஒண்ணும் தோணலை ஸார்...''

''இப்ப... நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ... ஒருவேளை அதிகாரிகள் ஃப்ளைட்டில் பொருத்தின இந்த டைனமைட்டை ட்ரேஸ் அவுட் பண்ணிட்டாங்கன்னா... அடுத்த நிமிஷமே எனக்கு டெலிபோன் மூலமா தகவல் வந்துடணும். ஃப்ளைட்டுக்குள்ளே நீயோ... காசிமோ... சௌத்ரியோ இருக்கக்கூடாது. அதிகாரிகள் டைனமைட்டை ஃப்ளஷ் அவுட் ஸிங்க்கிற்குள்ளிருந்து - வெளியே எடுக்க எடுக்கவே... நான் ரிமோட் கண்ட்ரோலை ஆபரேட் பண்ணி - ஃப்ளைட்டை ஏர் போர்ட்டிலேயே வெடிக்கப் பண்ணிடுவேன்... உண்மை அந்த அதிகாரிகளோடு சேர்ந்து எரிஞ்சு போயிடும்...''

குரு புன்னகைத்தான்.

''ஃப்ளைட்டுக்குள்ளே... நாங்க பொருத்தற டைனமைட்டை எந்த சக்தி வாய்ந்த மெட்டல் டிடெக்டரினாலும் கண்டுபிடிக்க முடியாது ஸார்...''

''விஷ்... யூ... ஆல்... த... பெஸ்ட்... புறப்படுங்க...''

திரிவேதி கை குலுக்க -

இரண்டு பேரும் ப்ரீப்கேஸோடு புறப் பட்டார்கள்.

## 6

**ரா**ஜபாளையம் - ஆஸ்பத்திரி தெருவுக்குள் அந்த டாக்ஸி நுழைந்து - 'பல்லாங்குழி விளையாட்டு' விளையாடிக் கொண்டே போய் - சிதிலமான வீட்டுக்கு முன்னால் நின்றது. ஒரு நடுத்தர வயது மனிதரும், கறுப்புக் கோட்டோடு வக்கீல் ஒருவரும் கீழே இறங்கினார்கள். காலை ஏழு மணி.

அந்த வீட்டுக்கு எதிரே - 'ஸ்டைல்மென் ஹேர் ட்ரஸ்ஸர்ஸ்' (ஏர்க்கண்டிஷண்ட்) என்று பெரிதாய் போர்டு மாட்டியிருந்த கடைக்கு முன்பாய் நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்தவரிடம் வக்கீல் கேட்டார்.

''லட்சுமியம்மான்னு இங்கே யாராவது இருக்காங்களா?''

''லட்சுமியம்மாவா? இருங்க... கேட்டுச் சொல்கிறேன்...'' என்றவர் ஸ்டைல்மென் ஹேர் ட்ரஸ்ஸர்ஸுக்குள் எட்டிப் பார்த்து - ''காந்தி ராஜா! ஒரு நிமிஷம் வந்துட்டுப் போங்க...'' என்றார்.

அந்த காந்திராஜா உள்ளேயிருந்து வந்தார்.

மறுபடியும் - வக்கீல் கேட்டார். ''இங்கே லட்சுமியம்மான்னு யாராவது இருக்காங்களா...?''

காந்திராஜா யோசித்தார்.

''அடையாளம்...?''

''ஒரு காலை விந்தி விந்தி நடப்பாங்க...''

''ஓ... அந்த அம்மாவா? அதோ அந்த விறகு டிப்போ தெரியுதே, அதுக்கு பக்கத்து வீடுதான்...''

''தேங்க்ஸ்...'' மறுபடியும் அவர்கள் டாக்ஸியில் ஏறிக்கொண்டார்கள். புறப்பட்டுப்



போய் அந்த விறகு டிப்போவுக்கு பக்கத்து வீட்டுக்கு முன்பாக இறங்கி உள்ளே போனார்கள். கூரை சரிந்து போன வீடு. முற்றத்தில் ஒரு கயிற்றுக்கட்டில். கட்டிலில் ஒரு அம்மாள் ஒருக்களித்து படுத்திருக்க - பக்கத்து ஆட்டுரலில் மாவை ஆட்டிக் கொண்டிருந்த ஒரு பெண் இவர்களைப் பார்த்ததும் சட்டென்று ஆட்டுரலின் சுழற்சியை நிறுத்தினாள். பெரிய பெரிய கண்களோடு - சந்தன நிறத்தில் திருத்தமாய் அழகாய் இருந்தாள். பழைய நிறம் மங்கிப் போன சேலை. கிழிசல் ஜாக்கெட்.

''யா...யாரு... வேணும்...?'' கேட்டுக் கொண்டே எழுந்து வந்தாள்.

''இங்கே... லட்சுமியம்மாங்கிறது?''

''இவங்கதான்...'' கட்டிலைக் காட்டினாள் அவள்.

''நீ...?''

''அவங்க மக...'' சொல்லிக் கொண்டே இரண்டு ஸ்டூல்களை எடுத்துப் போட்டாள். கூடவே அம்மாக்காரியையும் உசுப்பினாள்.

''அம்மா... எந்திரியம்மா... உன்னைப் பார்க்கிறதுக்காக யாரோ வந்திருக்காங்க...''

லட்சுமியம்மாள் கைகளை ஊன்றி தளர்வாய் எழுந்து கொண்டிருக்கும்போதே வக்கீல் கேட்டார். ''உம் பேரென்னம்மா?''

''சுகந்தி...''

''லட்சுமியம்மாவுக்கு நீ ஒரேயொரு பொண்ணு தானா?''

''ஆமா...''

''படிச்சிருக்கியா...?''

''ம்... பிளஸ் டூ வரைக்கும்...''

லட்சுமியம்மாள் எழுந்து உட்கார்ந்தாள். கண்களை இடுக்கிக்கொண்டு இரண்டு பேரையும் பார்த்தாள். "யாரு...?"

வக்கீல் அவள் பக்கமாய் திரும்பினார், "நான் ஒரு வக்கீல். சென்னையிலிருந்து வர்றேன். இவர் மக்கின்ஸி. சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கார்."

சுகந்தியும், லட்சுமியம்மாளும் அந்த மக்கின்ஸியை குழப்பமாய்ப் பார்க்க - அவர் புன்னகைத்தார். வக்கீல் தொடர்ந்தார்.

"இந்த மக்கின்ஸி வேறு யாருமில்லை... உங்க அண்ணா முத்துராமனோட ரப்பர் தோட்டத்துக்கும் எஸ்டேட்டுக்கும் மேனேஜர்..."

முத்துராமன் என்ற பெயரைக் கேட்டதும் லட்சுமியம்மாளின் முகத்தில் மகிழ்ச்சி தத்தியது.

"அண்ணா வரலையா...?"

வக்கீலும் மக்கின்ஸியும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ஒரு சில விநாடிகளின் மௌனத்திற்குப் பிறகு -

வக்கீல் லட்சுமியம்மாளை ஏறிட்டார். "முத்துராமன் ரெண்டு நாளைக்கு முன்னாடி ஒரு கார் ஆக்ஸிடெண்டில் போயிட்டார். பாடி உருக்குலைஞ்சு போனதாலே அப்பவே டிஸ்போஸ் பண்ணிட்டாங்களாம்..."

"அ...ண்...ணா...!"

லட்சுமியம்மாள் அதிர்ந்து போய் - கண்கள் நிலை குத்தினாள். வக்கீல் தொடர்ந்தார். "நேற்றைக்குத்தான் அவர் எழுதி வெச்சிருந்த உயிலை வக்கீல் படிச்சுக் காட்டியிருக்கார். அந்த உயிலில் தன்னோட பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து பூராவையும் - உங்க பொண்ணு சுகந்தி பேர்க்கு எழுதி வெச்சிருக்கார்... கடந்த பத்து வருஷ காலமா உங்களையும் உங்க பொண்ணையும் கவனிக்காமே இருந்ததுக்காக



மன்னிப்புக் கேட்டிருக்கார். அந்த சொத்து விவரங்களை உங்ககிட்ட சொல்லவும் - அதனோட டாக்குமெண்ட்ஸை தரவும் - மக்கின்ஸி உங்களை சிங்கப்பூர் கூட்டிப்போக வந்திருக்கார்."

லட்சுமியம்மாள் ஆனந்தத்தில் தத்தளித்தாள்.

"அ... அ... அய்யா... நீ... நீ... நீங்க சொல்றதெல்லாம் நி... நிஜந்தானா...?"

"நிஜமேதான்..."

"எம்பொண்ணு சுகந்திக்கு மாத்துப் புடவை வாங்கக்கூட வழியில்லாமே கடந்த ஒரு மாச காலமா தத்தளிச்சிட்டிருக்கேன்யா... இந்தத் தெருவுல இருக்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் மாவாட்டி குடுத்து - இதுல கிடைக்கிற சம்பாத்தியத்துலதான் நானும் எம்பொண்ணும் வயித்தை கழுவிட்டிருக்கோம்... இந்த... நேரத்துல... எ...எம்... பொ... பொண்ணுக்கு இப்படியொரு... அ... அ... அதிர்ஷ்டமா? என்னால நம்ப முடியலையம்மா..."

"நம்புங்கம்மா... நம்புங்க! உங்க பொண்ணு பேர்ல சொத்தக்களை மாத்தி எழுதறதுக்காக - இன்னிக்கே இப்பவே - நாம சிங்கப்பூர் புறப்படறோம்..."

"இப்பவேவா...?"

"இன்னிக்கு மத்தியானம் ஒரு மணிக்கு மதுரையிலிருந்து மெட்ராஸுக்கு பிளேன்ல போறோம். மெட்ராஸிலிருந்து சாயந்தரம் ஆறு மணிக்கு சிங்கப்பூர் ஃப்ளைட்ல புறப்படறோம். டிக்கெட்ஸ்கூட எடுத்துட்டோம்..."

வக்கீல் தன் தோல் பையைப் பிரித்து - ஃப்ளைட் டிக்கெட்டுகளை எடுத்துக்காட்டினார், சுகந்தி அதை ஆர்வமாய் வாங்கிப் பார்த்தாள்.

போயிங் 707 - கோல்டன் ஹெறவன்.

வக்கீல் தொடர்ந்து சொன்னார். "இந்த சிங்கப்பூர் ஃபிளைட்ல இடம் கிடைக்கிறதே கஷ்டம். உங்க அதிர்ஷ்டம் கிடைச்சிருக்கு. பத்து மணிக்குள்ளே நாம மதுரை ஏர்ஃபோர்ட்ல இருக்கணும். வெளியே டாக்ஸி காத்திட்டிருக்கு... நீங்க உடனே புறப்பட்டா பரவாயில்லை..."

"இதோ..."

அம்மாவும் மகளும் ஆர்வமாய் எழுந்தார்கள்.



## 7

ஏர்ஃபோர்ட்.

டொமெஸ்டிக் செக்ஷன்... போயிங் 707 கோல்டன் ஹெவன் அந்த மத்தியான வெய்யிலில் பளபளப்பாய் நின்று கொண்டிருக்க - சௌத்ரியின் தலைமையில் குருவும் காசிமும் டாய்லெட் செக்ஷனில் 'சிங்க்'கைப் பிரிப்பதில் மும்முரமாய் இருந்தார்கள்.

வெள்ளுடுப்பு யூனிபார்மில் - ஆறடி உயரத்துக்கு ஆஜானுபாகுவாய் இருந்த சௌத்ரி 45-க்கும் 50-க்கும் மத்தியில் - ஏதோ ஒரு வயதில் இருந்தார். சதைப்பிடிப்பான சதுர முகத்தில் தீட்சண்யம் நிரம்பிய சின்னக் கண்கள். அகன்ற நாசிக்குக் கீழே - சிரத்தையாய் ட்ரீம் செய்யப்பட்டு - டை அடித்த மீசை. சிகரெட் புகையோடு உறவாடி உறவாடி - கறுப்படித்துப்போன உதடுகள். இரண்டு மடிப்புகள் விழுந்த சதைப்பிடிப்பான கழுத்து.

ஃபிளைட்டுக்கு வெளியே எட்டிப்பார்த்து விட்டு - உள்ளே வந்த சௌத்ரி கேட்டார். "என்ன குரு... சிங்க்கை பிரிச்சுட்டியா?"

"ஆச்சு... ஸார்..."



"இதே பதிலை பத்து நிமிஷமா சொல்லிட்டிருக்கே..."

"எல்லா ஸ்க்ரூவும் துரு பிடிச்சிருக்கு ஸார்..."

"அந்த காரணத்தையெல்லாம் சொல்லிட்டிருக்காதே... இந்த நேரம் பார்த்து எந்த சுப்பீரியர் அபிஷியலாவது ஃபிளைட்டுக்குள்ளே வந்தான்னா மாட்டிக்குவோம்..."

அவர் செல்லிக் கொண்டிருக்கும்போது - டாய்லெட் சிங்க் தனியே தொப்பி மாதிரி கழன்று வர - உள்ளே குழாயும் - கழிவுகள் தேங்கி நிற்பதற்காக ஒரு சிறிய தொட்டியும் தெரிந்தது. மூக்குக்குப் பிடிக்காத துர்நாற்றம் காற்று மண்டலத்தில் லேசாய் கலக்க - நெடியைத் தாங்கிக் கொள்வதற்காக - சென்ட் தெளிக்கப்பட்ட கர்ச்சீப்பால் மூக்கையும் சேர்த்து குருவும் காசிமும் கட்டிக் கொண்டார்கள். ஒடோனில்லை சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்கள்.

சௌத்ரி டூல்ஸ் பாக்ஸுக்குள் இருந்த அந்த டைனமைட் சமாச்சாரத்தை ஜாக்கிரதையாய் எடுத்தார். சக்தி வாய்ந்த ஜெலடீன்கள் - பிளாட்டின கம்பிகளில் ஒரு சிமெண்ட் பலகையோடு சேர்த்து கட்டப்பட்டிருக்க - அதன் உடம்புக்கு உள்ளேயும், வெளியேயும் - ரோமத்தைக் காட்டிலும் மெலிதான இழைகள் நூற்றுக்கணக்கில் - எட்டுத் திசைகளிலும் பிரிந்திருந்தது.

"குரு! இதைப் பத்திரமா வாங்கி ஃபிக்ஸ் பண்ணு..."

குரு அதை பயமாய் வாங்கினான். கழிவுத் தொட்டிக்குள் வைத்து - அது அசையாமல் இருக்க - ஒரு தோல் பெல்ட்டால் இழுத்துக் கட்டினான்.

காசிம் சிங்க்கை எடுத்துப் பொருத்தினான்.

"சீக்கிரம்..."

சௌத்ரி நிமிஷத்துக்கு ரெண்டு தரம் வெளியே போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்தார்.

மேலும் ஒரு ஐந்து நிமிஷ அவகாசத்தி ஸிங்க் பொருத்திக் கொண்டது. ஸ்க்ரூக்க முறுக்கிவிட்டு - வியர்வை மின்னும் முக களோடு நிமிர்ந்தார்கள்.

''முடிச்சாச்சு ஸார்...''

''மணி இப்ப எவ்வளவு?''

''ரெண்டு ஸார்...''

''காசிம்! நீ ஒரு காரியம் பண்ணனும்...''

''என்ன ஸார்...?''

''பர்மிஷன்ல ஒரு மணி நேரம் வெளி போ... ஏதாவது ஒரு பப்ளிக் டெலிபோ பூத்திலிருந்து திரிவேரதிக்கும் - நம்ம பார்ட்டிக்கு போன் பண்ணி - டைனமைட் ஃபிக் பண்ணிட்ட விஷயத்தை சங்கேத பாஷையி சொல்லிடு...''

''எஸ்... ஸார்...''

மூன்று பேரும் விமானத்தை விட் வெளியே வந்தார்கள். ஏர்ஃபோர்ட் முழுவது அந்த மத்தியான நேரத்தில் வெளிச்சோடி போயிருந்தது. குரு சுற்றும் முற்றும் பார்த்துவிட் சௌத்ரியை ஏறிட்டான்.

''ஸார்...''

''ம்...''

''பிளைட் வெடிச்சு சிதறினதும்... அதிகா களுக்கு நம்ம மேலே சந்தேகம் வராதே...?''

''எப்படி வரும்? நாச வேலைன் தெரிஞ்சாத்தானே... விசாரணை கமிஷனுக் ஏற்பாடு பண்ணுவாங்க... இதோ பார் குரு... நீ சரி... காசிமும் சரி... இந்த டைனமை



விவகாரத்தை மனசுல போட்டு குழப்பிக்காமே... ஹாய்யா இருங்க... வழக்கம் போல வேலைக்கு வாங்க... போங்க... எது வந்தாலும்... நான் பார்த்துக்கறேன்...''



# 8

குரோம்பேட்டை வெற்றி தியேட்டர் அருகே இருந்த டெலிபோன் பூத்துக்கு முன்னால் தன் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு - உள்ளே நுழைந்தான் காசிம். கண்ணாடிக் கதவைச் சாத்திக் கொண்டு - ரிஸீவரை எடுத்து - காதுக்கு பொருத்தி டயலைச் சுழற்றினான். மறுமுனையில் திரிவேதியின் 'ஹலோ' குரல் கேட்டதும் - நாணயத்தைப் போட்டு உயிர்ப்பித்துக் கொண்டான்.

''ஸார் நான் காசிம்...''

''எங்கிருந்து பேசறே...?''

''ஒரு டெலிபோன் பூத்திலிருந்து ஸார்...''

''என்ன? வேலை முடிஞ்சுதா...?''

''முடிஞ்சுது ஸார்...''

''ஃபிளைட் புறப்படுகிற நேரத்தில் மாறுதல் ஏதும் இல்லையே?''

''இல்லே ஸார்...''

''சரி... இனிமே நான் பார்த்துக்கறேன்...''

''தாங்க்யூ ஸார்...'' லைனை கட் செய்து விட்டு வேறு சில எண்களை டயலில் சுழற்றினான். லைன் கிடைத்ததும் - மறுபடியும் நாணயத்தைப் போட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டான். ''ஹலோ...''

''யாரு...?'' - ஒரு கரகரப்பான குரல் கேட்டது.

"ஸார்... நான் காசிம்..."

"என்ன...?"

"எல்லாமே நல்லபடியா நடந்துட்டு வரு
ஸார்..."

"குட்! அப்போ... ஆறு மணிக்கு மேலே வா
வேடிக்கை பார்க்கலாம்ன்னு சொல்லு..."

"கண்டிப்பா பார்க்கலாம் ஸார்..."

"சொர்க்கத்துல மொத்தம் எத்தனை பே
போறாங்க?"

"சொர்க்கம் ஹவுஸ்ஃபுல் ஸார்..."

"முன்னூத்தி இருபது ஸீட்டும் ஃபுல்லா?"

"வி.ஐ.பி. ஸீட்ஸ் மட்டும் ஏழெட்டு இருக்
ஸார்..."

"காரியம் நடக்கட்டும்... பின்னாடி பேசிக்
வோம்..." - மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்ப
- காசிமும் ரிஸீவரை வைத்துவிட்டு வெளியே
வந்தான்.

## 9

"என் மனைவி மாதிரி பார்க்கவே
முடியாதுடா..."

"எதனால அப்படி சொல்றே...?"

"சண்டை போட.... மாமியாரும் இல்லை.
நாத்தனாரும் இல்லை. இது என்ன வாழ்க்கை
அட்லீஸ்ட் ஒரு சின்ன வீடாவது செட்ட
பண்ணித் தொலையுங்கன்னு சொல்றா..."

- கல்கியில் வந்த மேற்கண்ட ஜோக்கை
படித்துவிட்டு - அந்த மத்தியான நேரத்தி



விவேக் சிரித்துக் கொண்டிருந்தபோது, ரூபலா வந்தாள்.

"என்ன சிரிப்பு?"

"இந்த ஜோக்கைப் படிச்சுப் பாரு..."

ரூபலா வாங்கிப் படித்து விட்டு - சிரிக்காமல் புத்தகத்தை விவேக்கிடமே கொடுத்தாள். "சின்ன வீடு ஜோக்ன்னா ஆம்பிளைக்கு ஒரு சந்தோஷம்..."

"பின்னே இருக்காதா...?"

"என்ன சொன்னீங்க?"

- இடுப்பில் கை வைத்து ரூபலா முறைத்துக் கொண்டிருக்கும்போதே - வாசலில் காலிங் பெல் 'பிங் பாங்' என்றது.

"போய் பாரு! உன்னோட அப்பா, அம்மாவைத் தவிர - வேற யார் வந்திருந்தாலும் என்னைக் கூப்பிடு..."

ரூபலா 'தொப்'பென்று கட்டிலில் உட்கார்ந்தாள். "நான் போய் கதவைத் திறக்க மாட்டேன். உங்களுக்கு தேவையாயிருந்தா... நீங்களே போய்த் திறந்து - வர்றவங்களுக்கு ஆரத்தி எடுங்க..."

"போச்சுடா..." தலை மேல் கை வைத்துக் கொண்டு - வாசல் கதவை நோக்கிப் போனான் விவேக். அதற்குள் காலிங்பெல் பொறுமையில்லாமல் இரண்டு தடவை கதறி விட்டது.

கதவின் தாழ்ப்பாளை விலக்க -

வெளியே தொப்பியைக் கழற்றி - வழுக்கையில் அரும்பியிருந்த வியர்வையை கர்ச்சீப்பால் செல்லமாய் ஒற்றிக் கொண்டு கோகுல்நாத் நின்றிருந்தார். விவேக்கைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

''என்ன விவேக்... மத்தியான தூக்கமா?''

''மத்தியான தூக்கமா? அதுக்கெல்லாம் முன் ஜன்மத்துல தவம் பண்ணியிருக்கணும் கோகுல் நாத்...''

ரூபலா அறையினின்றும் எட்டிப்பார்த்து - ''வாங்க அங்கிள்'' என்றாள். கோகுல்நாத் உள்ளே வந்தார்... ''கொஞ்சம் ஐஸ் வாட்டர் குடும்மா...''

''மோர் சாப்பிடறீங்களா அங்கிள்?''

விவேக் குறுக்கிட்டான். ''நீ கலந்து தர்ற மோர்க்கு ஐஸ் வாட்டரே பெட்டர்... கோகுல் நாத்துக்கு அதையே கொண்டு வந்து கொடு...''

ரூபலா விவேக்கை முறைத்துக்கொண்டே உள்ளே போனாள்.

''உட்கார்ங்க கோகுல்நாத்... எனி திங் இம்பார்ட்டெண்ட்?''

''அது இம்பார்ட்டெண்டா... இல்லையான்னு நீங்கதான் சொல்லணும் விவேக். அரை மணி நேரத்துக்கு முன்னாடி - கிண்டி போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஒரு தகவல் வந்தது. கிண்டி ரேஸ் கோர்ஸ் ரோட்டில் இருக்கிற ஒரு பெண் தன் தோழிக்கு டெலிபோன் செய்ய ரிஸீவரை எடுத்து காதுக்குப் பொருத்தினபோது - ஒரு கிராஸ் டாக் கேட்டிருக்கு. அந்த டாக் இந்த பார்ம்ல இருக்கு.''

'அப்போ ஆறு மணிக்கு மேலே வாண வேடிக்கை பார்க்கலாம்ன்னு சொல்லு...'

'கண்டிப்பா பார்க்கலாம் ஸார்.'

'சொர்க்கத்துல மொத்தம் எத்தனை பேர் போறாங்க?'

'சொர்க்கம் ஹவுஸ்ஃபுல் ஸார்...'

இந்த ரீதியில் யாரோ ரெண்டு பேர் பேசிட்டிருந்ததை அந்தப் பொண்ணு ஹியர் பண்ணியிருக்கு.''



விவேக்கின் நெற்றி சுருங்கியது.

''சொர்க்கம் ஹவுஸ்ஃபுல்லா?''

''ஆமா... இது ஏதோ ஒரு சங்கேத வார்த்தைன்னு சந்தேகப்பட்டு போலீஸ்ல சொல்லியிருக்கு அந்தப் பொண்ணு...''

ரூபலா ஐஸ் வாட்டரோடு வந்து - கோகுல் நாத்திடம் டம்ளரை நீட்ட, அவர் அதை வாங்கித் தொண்டைக்கு காண்பித்தார்.

விவேக் யோசனையில் இருந்தான்.

''ஆறு மணிக்கு மேல வாண வேடிக்கை பார்க்கலாம்ன்னு சொல்லு...''

''கண்டிப்பா பார்க்கலாம் ஸார்...''

''சொர்க்கத்துல மொத்தம் எத்தனை பேர் இருக்காங்க?''

''சொர்க்கம் ஹவுஸ்ஃபுல்!''

கோகுல்நாத் காலி டம்ளரை ரூபலாவிடம் கொடுத்துக்கொண்டே விவேக்கிடம் கேட்டார்.

''என்ன விவேக்... இந்த கான்வர்சேஷனுக்கு ஏதாவது முக்கியத்துவம் இருக்கும்ன்னு நினைக்கறீங்களா?''

''நிச்சயமா இருக்கு...''

''அந்த கோட் வேர்ட்ஸுக்கு என்ன அர்த்தம்?''

''யோசிக்கணும். க்ராஸ் டாக்கை ஹியர் பண்ணின அந்தப் பொண்ணோட வீடு உங்களுக்குத் தெரியுமா கோகுல்நாத்?''

''கிண்டி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் இந்திரபூபதிக்குத் தெரியும். அவரைப் போய் பார்க்கலாமா விவேக்...''

''கண்டிப்பா பார்க்கிறோம்...''

விவேக் எழுந்தான்.

# 10

திரிவேதி தன் மணிக்கட்டில் இருந்த கை கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் 4.30. ரிமோட் கண்ட்ரோல் சாதனம் பொருத்தப்பட்ட கிரிக்கெட்டியர் வீடியோ கேமை எடுத்து ப்ரீப் கேஸில் வைத்துக்கொண்டு எழுந்தார்.

அறையினின்றும் வெளியே வந்தபோது-

பேக்டரி யூனிட்டின் ப்ரோக்ராமர் ஷர்மா எதிர்பட்டார்.

''மிஸ்டர் ஷர்மா...''

''ஸார்...''

''நான் வெளியே ஒரு வேலையா போறேன்... ஏழு மணிக்குத்தான் வருவேன். நீங்க உங்க வேலையை முடிச்சதும் வீட்டுக்கு போலாம்...''

''ஓ.கே. ஸார்...''

திரிவேதி யூனிட்களைக் கடந்து - போர்ட்டிகோவுக்கு வந்து - நின்றிருந்த அம்பாசிடர் காரில் ஏறி ட்ரைவிங் சீட்டை ஆக்ரமித்தார். ப்ரீப்கேஸை பக்கத்தில் வைத்துக் கொண்டு காரின் இக்னீஷியனை உசுப்பி - நகர வைத்தார்.

ரோட்டுக்கு வந்ததும் வேகம் பிடித்தார். நேரம் நாலரையைத் தாண்டியிருந்தாலும் - சூரியன் இன்னமும் சூடாகவே இருந்தான். கடல் காற்று ஏனோ ஸ்தம்பித்துப் போயிருந்தது.

ஸ்பிக் கட்டிடத்தைத் தாண்டும்போது - 4.40.

கிண்டியைத் தொட்டபோது - 4.45.

சரியாய் ஐந்து மணிக்கு கார் மீனம்பாக்கம் ஏர் ஃபோர்ட்டைத் தாண்டும்போது - ரன்வேயில்



நின்றிருந்த கோல்டன் ஹெவன் கண்ணுக்குச் சிக்கியது.

'உனக்கு ஆயுள் இன்னும் ஒரு மணி நேரம்தான். நான் நினைத்தால் இந்த நிமிஷமே கூட உன்னைத் தூள் தூளாக்க முடியும்...' - கொஞ்சம் கர்வப்பார்வை பார்த்துக்கொண்டே காரை விரட்டினார்.

போக்குவரத்து குறைந்த ரோடு.

ரோடு வெகு தூரத்துக்கு வெறிச்சிட்டுப் போய் கிடக்க - ஆக்ஸிலேட்டரை அழுத்தினார். கார் வேகம் எடுத்து 'விர்ர்ர்'ரென்று வீறியது.

ஒரு கிலோ மீட்டர் போயிருப்பார்.

சட்டென்று -

இருதயத்தின் மையத்தில் - லேசாய் குண்டூசியால் குத்தின மாதிரி ஒரு வலி பரவ - 'என்ன இது?' என்று யோசிப்பதற்குள் - வலியின் சதவீதம் 'விறுவிறு'வென்று பெருகி - 'கப்'பென்று நெஞ்சை அடைத்தது.

திரிவேதிக்குப் புரிந்து போயிற்று.

ஹார்ட் அட்டாக்.

இது இரண்டாவது அட்டாக். ஏற்கெனவே ஒரு தடவை 'அட்டாக்' வாங்கி - விஜயா நர்சிங் ஹோமில் படுத்து - ட்ரீட்மெண்ட் எடுத்து...

காரை முதலில் நிறுத்த வேண்டும். அடைக்கும் நெஞ்சை ஒரு கையால் பற்றிக் கொண்டு - ஒரு கையால் ஸ்டீயரிங்கைப் பிடித்துக் கொண்டு - இடது காலால் பிரேக்கை மிதிக்க முயன்றார் திரிவேதி.

தோற்றார்.

கால் ஒத்துழைக்க மறுத்த அதே விநாடி -

ஸ்டீயரிங்கைப் பிடித்திருந்த கையும் நழுவ -

கார் சட்டென்று முகத்தை நொடித்துக் கொண்டு -

ரோட்டினின்றும் விலகி -

சாலையோரமாய் திம்மென்று வளர்ந்து நின்றிருந்த 86-ம் நம்பர் புளியமரத்தின் அடித்தண்டில் மோத -

திரிவேதி கசகசவென்று ரத்தத்தில் நசுங்கினார். அவர்க்கு அருகே இருந்த ப்ரீப்கேஸ் - அதிர்ச்சியில் கதவு வழியாகத் தெறித்து -

பக்கத்தில் இருந்த -

சவுக்குத் தோப்புக்குள் போய் விழுந்தது.

## 11

தாம்பரத்தைத் தாண்டியது அந்த டாக்ஸி. சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

''ட்ரைவர்! மணி அஞ்சு பத்து... ஆறு மணிக்கு எங்களுக்கு ஃபிளைட்... கொஞ்சம் சீக்கிரமா போப்பா...'' - கணேசன் கெஞ்சினான். பக்கத்தில் மனைவி தேவி - அவளுக்கு அருகே ஜன்னல் ஓரமாய் பத்து வயது ரவிப்ரகாஷ்.

''கவலைப்படாதீங்க ஸார்... சீக்கிரமா போயிடலாம்...'' டிரைவர் சொன்னார்.

''இந்த வேகம் போதாது டிரைவர்... இன்னும் கொஞ்சம் வேகமா போ...''

தேவி குறுக்கிட்டு சிடுசிடுத்தாள். ''டிரைவர் போகிற வேகத்திலேயே போகட்டும்... நீங்க சொல்றபடி வேகமா போனா... எதிர்ல வர்ற லாரி மேலேயோ... பஸ் மேலேயோ மோதி... சிங்கப்பூர்க்கு போகிறதுக்கு பதிலா எமலோகம் போக வேண்டியதுதான்...''



கணேசன் அவளை கோபமாய் பார்த்தான். ''அட அறிவுகெட்டவளே! ஃப்ளைட்டுக்கு போறவங்க யாராயிருந்தாலும் சரி... ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி ஏர் ஃபோர்ட்ல இருக்கணும். அதுவும் இது சிங்கப்பூர் போகிற பிளைட். கஸ்டம்ஸ் அது இதுன்னு ஏகப்பட்ட ஃபார்மாலிடீஸ் இருக்கு...''

டிரைவர் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

''போயிங் ஸெவன் நாட் ஸெவன் கோல்டன் ஹெவன்லயா ஸார் போறீங்க?''

''ஆமா...''

''அபாரமான ஃபிளைட் ஸார்... சிங்கப்பூர் போக பிரியப்படறவங்க... அந்த ஃபிளைட்டைத் தான் லைக் பண்றாங்க... ஒரு வாட்டி உள்ளார போய் பார்க்கணும்...''

எதிரே வந்த லாரிகளும் பஸ்களும் சர்சர்ரென்று - காற்றை சீய்த்துக் கொண்டு போயிற்று.

ரவிப்ரகாஷ் கணேசனின் விலாவை சுரண்டினான்.

''அப்பா!''

''என்னடா?''

''ஒண்ணுக்கு வருது...''

''அராத்து! உனக்கு நேரம் காலமே தெரியாதாடா?''

''அவரசமா வருதுப்பா...''

''அடக்கிக்கோ... ஏர் ஃபோர்ட்டுக்கு போய்... டாய்லெட் போவியாம்?''

''முடியாதுப்பா... டாக்ஸியை நிப்பாட்டச் சொல்லு...''

''டாக்ஸியை நிப்பாட்டினா லேட்டா யிடும்டா... பல்லைக் கடிச்சுகிட்டு அடக்கிக்கோ... பத்து நிமிஷத்துல ஏர் ஃபோர்ட் வந்துடும்...''

''பையன் என்ன ஸார் சொல்றான்?''

''ஒண்ணுமில்லேப்பா... நீ டாக்ஸியை ஓட்டு...''

ஏறக்குறைய ஒரு ஐந்து நிமிஷம் வேகமாய் ஓடிக் கொண்டிருந்த டாக்ஸி சட்டென்று வேகம் குறைந்தது. ரோட்டின் வலது பக்க ஓரமாய் ஒரு சின்ன கும்பல். ட்ராபிக் கொஞ்சம் குலைந்து போய் - இரண்டு பக்கமும் வாகனங்கள் தேங்கியிருந்தது. கான்ஸ்டபிள் ஒருவர் விசில் ஊதி கலைத்து - நகர்த்திக் கொண்டிருந்தார்.

''டிரைவர்! என்ன கும்பல் அது?''

''தெரியல்ல ஸார்... ஏதோ ஆக்ஸிடெண்ட் போலிருக்கு.புளியமரத்து மேல கார் மோதியிருக்கு...''

கணேசன் தலையில் அடித்துக் கொண்டான். ''வீட்லயிருந்து புறப்பட்ட நேரமே சரியில்லை...''

டாக்ஸி வாகனங்களுக்கு பின்னால் போய் நின்றது.

''அப்பா... ஒண்ணுக்கு'' - ரவிப்ரகாஷ் ஒற்றை விரலைக் காட்ட - கணேசன் எரிந்து விழுந்தான்.

''போய்த் தொலை... அதான் வண்டி நின்னிருக்கே?''

ரவிப்ரகாஷ் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

அம்மாக்காரி கத்தினாள் ''ஓரமாவே நின்னு ஊத்துடா...''

பையன் கேட்காமல் ரோட்டோரமாய் இருந்த சவுக்குத் தோப்புக்குள் - நுழைந்து - ட்ரவுசரை விலக்கி -



சர்ர்ர்.... சர்ர்ர்ர்ர்...

பாதிப்போய் கொண்டிருக்கும்போதே - அவன் பார்வையில் புதர்க்குப் பின்னால் வாயைப் பிளந்து கொண்டு விழுந்திருந்த ப்ரீப்கேஸும், ப்ரீப்கேஸை விட்டு கொஞ்சம் தள்ளி கிடந்த - அந்த கிரிக்கெட்டியர் வீடியோ கேமும் விழுந்தது.

கண்கள் சந்தோஷத்தில் விரிந்தது.

'அப்பாவிடம் கேட்டு - அவர் வாங்கித் தரமாட்டேன் என்று சொன்ன அதே கிரிக்கெட்டியர் வீடியோ கேம்.'

அவசர அவசரமாய் பெய்து விட்டு -

புதரை நோக்கி ஓடினான்.

வீடியோ கேமை அள்ளி மார்போடு அணைத்துக் கொண்டு வேகமாய் டாக்ஸியை நோக்கி வந்தான்.

கணேசன் கத்தினான்.

''சீக்கிரமா வாடா... வண்டியெல்லாம் போகுது...''

ரவிப்ரகாஷ் ஓடி வந்து டாக்ஸியில் தாவினான்.

''என்னடா இது?''

''அங்கே கிடந்தது.''

''என்னங்க இது?'' தேவி கேட்டாள்.

ரவிப்ரகாஷ் சொன்னான். ''இதுதாம்மா வீடியோ கேம். இதுல கிரிக்கெட் விளையாடலாம். அப்பாகிட்டே இதைத்தான் ரொம்ப நாளா கேட்டுட்டிருந்தேன்...''

டாக்ஸி நகர்ந்தது.

''எங்கடா கிடைச்சுது உனக்கு?'' கணேசன் ஆச்சர்யமாய் கேட்டான்.

''ஒண்ணுக்குப் போன இடத்துல...''

''அங்க எப்படிடா கிடைக்கும்?''

''எனக்கு... தெரியாது... அங்க விழுந்து கிடந்தது... எடுத்துட்டு வந்துட்டேன்...'' தேவி குறுக்கிட்டாள். ''சரி விடுங்க... போன இடத்துல அவனுக்கு இது கிடைச்சுருக்கு. அங்கே வந்தவங்க யாராவது விட்டுட்டு போயிருக்க லாம்....''

டாக்ஸி கும்பலைக் கடந்தது.

கணேசன் எட்டிப் பார்த்தான்.

''கார் மரத்து மேல மோதியிருக்கு. ஆள் செத்துட்டார் போலிருக்கு. முன் பக்க உடைஞ்ச கண்ணாடி பூராவும் ரத்தம்...''

''அந்த கண்றாவியை ஏன் பார்க்கறீங்க? உங்களுக்குத்தான் ரத்தத்தைப் பார்த்தாலே தலையைச் சுத்துமே! டிரைவர்... டாக்ஸியை கொஞ்சம் வேகமா விடுங்க...''

கான்ஸ்டபிள் விசிலை ஊதி - கும்பலைக் கலைத்து வழி ஏற்படுத்திக் கொடுக்க டாக்ஸி வேகம் பிடித்து - ஏர் ஃபோர்ட்டை நோக்கி போயிற்று.

ரவிப்ரகாஷ் தன் கையிலிருந்த வீடியோ கேமை ஆசையாய் பார்த்து விரல்களால் தடவினான்.

## 12

விவேக் அந்தப் பெண்ணை ஏறிட்டான். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தப் பெண் கன்னங்களில் சதை பிடித்து ஊட்டமாய் தெரிந்தாள். கழுத்தில் கிடந்த சங்கிலியை எடுத்து



முன் பற்களால் கடிப்பதும் - விடுவதுமாய் இருந்தாள். வயது இருபது இருக்கலாம்.

''உம் பேரென்னம்மா?''

''மதனகுமாரி...''

''அந்த க்ராஸ் டாக்ல நீ கேட்ட ரெண்டு குரலும் ஆண் குரல் தானே?''

''ஆமா... ஸார்...''

''பேசின ரெண்டு குரலிலேயும் சீரியஸ் னெஸ் இருந்ததா?''

''கிண்டலாவும் அதே சமயத்துல சீரியஸாவும் பேசினாங்க ஸார்...''

''சொர்க்கம் ஹவுஸ் ஃபுல் என்கிற வார்த்தைக்குப் பிறகு அந்த ரெண்டு பேரும் ஏதும் பேசிக்கலையா?''

''பேசிகிட்டாங்க ஸார்... ஆனா அவங்க பேசினது தெளிவா காதுல விழலை... ஏதோ ஒரு நெம்பர் சொன்ன மாதிரி ஞாபகம்...!''

''என்ன நெம்பர்?''

''முன்னூத்திப் பத்தோ... முன்னூத்தி இருபதோ...''

விவேக் கோகுல்நாத்தை ஏறிட்டான். ''நிச்சயமா இது டெலிபோன் நெம்பர் கிடையாது...''

''ஏதாவது ஒரு வீட்டோட நெம்பரா இருக்கலாம்... விவேக்...''

''எனக்கு அப்படி தோணலை கோகுல்நாத்...'' - விவேக் தலையாட்டி அந்த மதனகுமாரியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். பைக்கை நோக்கி நடந்து கொண்டே கோகுல்நாத்திடம் சொன்னான். ''சாயந்தரம் ஆறு

மணிக்கு மேல் வாண வேடிக்கை, சொர்க்கம் ஹவுஸ்ஃபுல், முன்னூறுக்கு மேலே ஏதோ ஒரு நெம்பர்... இந்த மூணு வாக்கியங்களுக்கும் ஏதோ ஒரு வகையில நெருங்கிய சம்பந்தம் இருக்கு கோகுல்நாத்..."

"பொதுவா 'ஹவுஸ்ஃபுல்'ங்கிற வார்த்தை சினிமா தியேட்டர்கள் மட்டுமே உபயோகப் படுத்தற வார்த்தை... வாண வேடிக்கை கோயில் உற்சவ நேரங்களில் உபயோகப்படுத்துகிற வார்த்தை... ரெண்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?"

விவேக் பைக்கை ஆக்ரமித்து உதைக்க - கோகுல்நாத் பில்லியனில் தொற்றிக் கொண்டார். அது புகை கக்கி புறப்பட்டது.

"ஒண்ணும் பிடிபடலை... வீட்டுக்கு கிளம்ப வேண்டியது தான் கோகுல்நாத்..."

"எனக்கொரு சந்தேகம் விவேக்?"

"என்ன?"

"போன்ல கேட்ட வார்த்தைகள் கடத்தல் காரர்களோட சங்கேத வார்த்தைகளாய் இருக்க லாமோ... விவேக்?"

"சொன்ன நேரத்தை நோட் பண்ணீங்களா... கோகுல்நாத்? சாயந்தரம் ஆறு மணி. கடத்தல் காரர்களின் ராஜாங்கமே ராத்திரி நேரங்கள்ல தானே? சாயந்தர ஆறு மணி அவங்க தொழிலுக்கு ஒத்து வராதே...?"

பைக் ரேஸ் கோர்ட்ஸ் ரோட்டை விட்டு வெளியே வந்து - கிண்டி பாலத்தைத் தொட்டு திரும்பியது.

"அப்போ இந்த விவகாரத்தை கை கழுவ வேண்டியதுதானா?"

"வேற வழி?"



பைக் ஒரு சிக்னலில் நின்று மறுபடியும் வேகம் எடுத்தது. சைதாப்பேட்டை கார்னர்க்கு வந்ததும் விவேக் கேட்டான்.

"சொர்க்கம்ங்கிற பேர்ல சிட்டியில ஏதாவது ஹோட்டல் இருக்கா கோகுல்நாத்?"

"எனக்கு தெரிஞ்சு இல்ல..."

"விசாரிச்சு பாருங்களேன்... அந்தப் பேர்ல ஹோட்டல் இருந்தா... 310-ம் ரூம் நெம்பர்களா இருக்கலாம்..."

"சரி... அந்த வாண வேடிக்கை?"

கோகுல்நாத் சிரிப்போடு கேட்ட அதே விநாடி-

விவேக் பைக்கின் வேகத்தை சட்டென்று குறைத்து ரோட்டோரமாய் ஒதுக்கி நிறுத்தினான்.

"என்ன விவேக்?"

விவேக்கின் பார்வை ரோட்டோரத்தில் நின்றிருந்த - அந்த பிரம்மாண்டமான ஹோர்டிங் மேல் நிலைத்துப் போயிருந்தது.

"கோகுல்நாத் அந்த ஹோர்டிங் விளம்பரத்தைப் பாருங்க..."

கோகுல்நாத் பார்த்தார்.

விளம்பர ஹோர்டிங்கில் - சிங்கப்பூர் பெண்ணொருத்தி மனோகரமாய் சிரித்துக் கொண்டிருக்க - பக்கத்திலேயே கொட்டை எழுத்தில் வாசகங்கள்.

தினசரி மாலை ஆறு பத்துக்கு - சென்னை யிலிருந்து சிங்கப்பூர்க்கு ஒரு தங்க சொர்க்கம் பறந்து செல்கிறது.

தினசரி 320 பேர் அந்த சொர்க்கத்தை அனுபவிக்கிறார்கள்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் உங்களுக்காகவே உருவாக்கிய தங்க சொர்க்கம்.

உள்ளே இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உன்னத இன்பம்.

இன்றைக்கு பயணப்படும் 320 பயணிகளில் நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

- சீரிய சிங்கார சேவைக்கு - சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்.

விளம்பரத்தைப் படித்ததுமே - கோகுல்நாத் பதட்டப்பட்டார்.

''விவேக்... எனக்கு புரியுது...''

''வெடிக்கப் போகிற விமானத்துக்குத்தான் வாண வேடிக்கை என்று சொல்லியிருக்கிறான்.''

விவேக் வாட்ச்சைப் பார்த்தான்.

நேரம் 5.45.



## 13

ஏர்போர்ட் லௌன்ஞ்ச் முழுவதும் ரோஜா வின் இதழ்கள். சூர்யகலாதரனை வாழ்த்திப் போடும் கோஷங்கள். லௌன்ஞ்ச் ஸ்பீக்கரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிவிப்புகள் கசிந்து கொண்டிருக்க - சூர்ய கலாதரன் எல்லோரிடமும் விடைபெற்று - ஃபிளைட்டை நோக்கிப் போனான்.

அதே விநாடிகளில் -

தாரிகாவும், சந்திரசேகரும் - ரிசப்ஷன் கௌண்டரில் 'வீல் சேர்' ஒன்றை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



''யார்க்கு?'' - கௌண்டரில் இருந்த இளைஞன் கேட்டான்.

''என் கணவர்க்கு?''

''அவர்க்கு என்ன உடம்பு?''

''ஹார்ட் பேஷண்ட். நடக்கக் கூடாது என்பது டாக்டரின் புத்திமதி.'' அந்த இளைஞன் லேசாய் கோபப்பட்டான்.

''பேஷண்டை கூட்டி வருபவர்கள் ஒரு மணி நேரத்துக்கு முன்பே வந்தால் என்ன?''

''நாங்கள் ஏர்ஃபோர்ட்டுக்கு நாலரை மணிக்கே வந்துட்டோம். ஆனால் இந்த சினிமா ரசிகர்களின் கும்பலில் உடனடியாய் உள்ளே வரமுடியவில்லை.''

''கஸ்டம்ஸ் சோதனைகளை முடித்துக் கொண்டு விட்டீர்களா?''

''ஆயிற்று...''

''உங்கள் கணவர் எங்கே இருக்கிறார்?''

''அதோ!'' - வினைல் நாற்காலியொன்றில் சோர்வாய் உட்கார்ந்திருந்த தன் கணவனைக் காட்டினாள் தாரிகா.

''ஒரு பத்து நிமிடம் பொறுங்கள். ஏற்பாடு செய்கிறேன்.''

''தாங்க்யூ...''

லௌன்ஞ்சின் இன்னொரு திசையில் -

ராஜபாளையம் லட்சியம்மாளும் சுகந்தியும் ஏர்ஃபோர்ட்டை பிரமிப்பாய் பார்த்தபடி நடந்தார்கள். அவர்களுக்கு இரண்டு பக்கமும் வக்கீலும், மக்கின்ஸியும் இணையாக வந்தார்கள். வக்கீல் சொன்னார்.

''சிங்கப்பூர்ல ஒரு மாசம் இருந்து - டாக்குமெண்டேஷனை முடிச்சுகிட்டு... நீங்க

உடனடியா ஊருக்கு வந்துடலாம் லட்சுமி யம்மா..."

"அய்யா... நீங்க ஒவ்வொண்ணையும் சொல்லச் சொல்ல - என்னால நம்பவே முடியலை... எம்பொண்ணுக்கு கல்யாணம் பண்ணணும்... பணம் அனுப்பி வைய்யின்னு எங்கண்ணனுக்கு எத்தினியோ தடவை கடுதாசி எழுதி போட்டிருப்பேன். அதுக்கெல்லாம் பதிலே வந்ததில்லை..." - சேலைத்தலைப்பால் கண் களை துடைத்துக் கொண்டாள் லட்சுமியம்மாள்.

வக்கீல் சிரித்தார்.

"அப்போ... அவர் மனசு கல்லாய் இருந் திருக்கலாம். பின்னாடி கொஞ்சம் கொஞ்சமா... மாறியிருக்கலாம்..."

சுகந்தி ஆர்வமாய் - தனக்கு முன்னால் கழுத்தில் மாலைகளோட ஃபிளைட் ஸ்டேர்ஸை நோக்கி நடந்து போகும் சூர்ய கலாதரனையே பார்க்க - மக்கின்ஸி அவளுடைய தோளைத் தட்டி புன்னகைத்தார்.

"அந்த சினிமா நடிகனை விட.... இந்த நிமிஷம் நீ தான் பணக்காரி. அப்படி அவனை ஆச்சர்யமா பார்க்காதே! அவன் தான் உன்னை ஆச்சர்யமா பார்க்கணும்..."

சுகந்தி சிரிக்க - விமானத்தின் இடுப்போடு ஒட்டியிருந்த ஸ்டேர்ஸின் படிகளில் நான்கு பேரும் மெதுவாய் ஏற ஆரம்பித்தார்கள்.

அவர்களுக்குப் பின்னால் -

கணேசன் மனைவி தேவியோடும் - மகன் ரவிப்ரகாஷோடும் வேகவேகமாய் வந்து கொண்டிருந்தான்.

"அம்மாடி! எப்படியோ சரியான நேரத்துக்கு ஏர்ஃபோர்ட் வந்து சேர்ந்துட்டோம்..."



தேவி கணவனுக்கு பதில் சொல்லாமல் - விமானத்துக்குள் நுழைந்து கொண்டிருந்த - சூர்ய கலாதரனைப் பார்த்து, "சினிமாவில பார்க் கிறதைக் காட்டிலும் நேர்ல ஆள் ஜம்ன்னு இருக்கார்..." என்றாள்.

"உனக்கு எப்பப்பாரு சினிமா நினைப்பு தான்..."

"அப்பா..." ரவிப்ரகாஷ் குரல் கொடுத்தான்.

"என்னடா?"

"இந்த வீடியோ கேமை எப்படி ஆப்ரேட் பண்றது?"

"இவன் ஒருத்தன்... அதை தூக்கி எறிஞ்சுட்டு வாடா..."

"ம்...மாட்டேன்..."

"அவனை ஏன் திட்டறீங்க? வீடியோ கேமை ஆப்ரேட் பண்ணத் தெரியலைன்னா... தெரியலைன்னு சொல்லுங்க... அதுக்காக பையனை ஏன் திட்டணும்?"

"உனக்குத் தெரிஞ்சா... நீயே அவனுக்கு சொல்லிக் குடு..."

"வாடா கண்ணா... ஃபிளைட்டுக்குள்ளே போய் உட்கார்ந்ததும் நான் உனக்கு சொல்லித் தர்றேன்... ஒவ்வொரு பொத்தானையும் ஞாபகம் வெச்சுகிட்டு - அமுத்தனா போதும்..."

மூன்று பேரும் ஸ்டேர்ஸின் படிகளில் உயர்ந்து - விமானத்துக்குள் போனார்கள். முன்னால் நின்ற சிங்கப்பூர் ஏர் ஹோஸ்டஸ் ஒருத்தி - தன் சுத்தமான பல் வரிசையைக் காட்டி - குட் ஈவினிங் சொல்லி - ரோஜாக்கள் நிரம்பிய தட்டை நீட்டினாள்.

தேவி ஃபிளைட்டின் உள்ளமைப்பைப் பார்த்து 'ஹக்' என்று ஆச்சர்யப்பட்டாள்.

''என்னங்க இது... ஏவி.எம்.சினிமா செட் மாதிரி இருக்கு...''

கணேசன் காதைக் கடித்தான்.

''பட்டிக்காடு! வாயைப் பொளந்துகிட்டு நிக்காதே... உள்ளே போ... ஏர் ஹோஸ்டஸ் உன்னைப் பார்த்து சிரிக்கிறா...''

தேவி உள்ளே போனாள்.

ரவிப்ரகாஷ் அந்த வீடியோ கேமை மார்போடு அணைத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். விமானம் கொஞ்சம் கொஞ்சமாய் நிரம்பிக் கொண்டிருந்தது.

## 14

விவேக்கும் - கோகுல்நாத்தும் விமான நிலைய அதிகாரி ஜக்தீஷ் முன்னால் உட்கார்ந்திருந்தார்கள். அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

''உங்களிடமிருந்து டெலிபோன் செய்தி வந்ததுமே... ஃபிளைட்டுக்கு டேக் ஆஃப்பும் க்ளியரன்ஸும் தரலை...''

விவேக் அவரை ஏறிட்டான். ''மிஸ்டர் ஜக்தீஷ்! டெலிபோனில் மதனகுமாரி கேட்ட க்ராஸ் டாக் வாக்கியங்களும் - சிங்கப்பூர் ஃபிளைட் கோல்டன் ஹெவனுக்கும் நிரம்ப ஒத்துப் போகிறது. க்ராஸ் டாக்கில் பேசிக் கொண்ட நேரம் ஆறு மணி. அதே ஆறு மணிக்குத்தான் கோல்டன் ஹெவனும் புறப்படுகிறது. சொன்ன நெம்பர் 310 அல்லது 320. அந்த எண்ணும் ஃபிளைட்டின் மொத்த சீட் எண்ணிக்கையோடு ஒத்து போகிறது. எல்லாவற்றுக்கும் மேலா சொர்க்கம் ஹவுஸ்ஃபுல் என்கிற வார்த்தை.... ஃபிளைட்டோட பெயருடன் ஒத்துப் போகிறது.''



அதிகாரி ஜகதீஷ் தன் சதைப்பிடிப்பான மூக்கு நுனியை சொறிந்து கொண்டார். ''வாண வேடிக்கை என்னும் அந்த வார்த்தை 'வெடி குண்டை' மீன் பண்ணுவதாக நினைக்கிறீர் களா?''

''ஆமா...''

''நாங்க ஏற்கெனவே மெட்டல் டிடெக்டரை வெச்சு... சோதனை பண்ணி பார்த்துட்டோமே...''

''பாஸஞ்சர்ஸோட பிலாங்கிங்ஸை செக் பண்ணீங்களா?''

''தரோவா... பண்ணிட்டோம்...''

''மறுபடியும் ஒரு தடவை பார்த்துடறது நல்லது...''

ஜக்தீஷ் தனக்கு முன்னால் இருந்த மைக்ரோ போனை 'ஆன்' செய்து - வேகமான ஆங்கிலத்தில் கரகரத்தார்.

''காப்டன்! ஃபிளைட்டுக்கு உடனடியா க்ளீயரன்ஸ் கிடைக்காது. பாஸஞ்சர்ஸை லௌன்ஞ்சுக்கு திரும்பச் சொல்லுங்க...''

## 15

ரவிப்ரகாஷ் ஜன்னலோர சீட்டுக்கு சாய்ந்து உட்கார்ந்து கொண்டு - தேவியிடம் வீடியோ கேமைக் காட்டிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இந்த பட்டன் எதுக்கு?''

''இதுதான் ஸ்டார்ட்! மேலே ''எஸ்''ன்னு போட்டிருக்கு தானே?''

''இது...?''

''ப்ளே! 'பி' போட்டிருக்கு பார்...''

''எஸ்ஸுன்னா?'' மூன்றாவது பட்டனைப் பார்த்துவிட்டு கேட்டான்.

''ஸ்கோர்!''

''சி-ஜின்னா?''

''க்ளோஸ்... த... கேம்...''

''இது?'' - டைனமைட் வெடிப்பதற்காக திரிவேதி செட் செய்திருந்த அந்த பட்டனைக் காட்டினான் ரவிப்ரகாஷ்.

தேவி பார்த்தாள். கறுப்பாய் - பட்டாணி சைஸில் அந்த பட்டன் தெரிந்தது. அதன் எந்தப் பக்கமும் எந்த எழுத்துமில்லை.

தேவி உதட்டைப் பிதுக்கினாள். ''இது என்னான்னு தெரியலையே...''

''அழுத்திப் பார்க்கட்டுமா?''

''ம்...''

ரவிப்ரகாஷ் தன் இடது கை ஆட்காட்டி விரலால் ஒரு முறை அழுத்தி எடுத்தாள். வீடியோ கேமின் உடம்பில் எந்த மாற்றமும் இல்லை.

''என்னம்மா... ஒண்ணுமே... ஆகலை?''

''அப்பாகிட்டே காட்டு...''

தேவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே - காக்பிட்டுக்குள்ளிருந்து அந்த அறிவிப்பு கசிந்தது.

''பயணிகளுக்கு ஒரு அறிவிப்பு. ஆறு பத்துக்கு புறப்பட வேண்டிய கோல்டன் ஹெவன் தவிர்க்க முடியாத காரணத்தினால் தாமதமாக புறப்படும். அனைத்துப் பயணிகளும் லௌன்ஞ் சிற்கு செல்லும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.''

தேவி கலவரமாய் கேட்டாள்.



''என்னங்க இது?''

''தெரியலையே?''

''அந்த ஏர் ஹோஸ்டஸை கேட்டுப் பாருங்களேன்.''

இருக்கைகளுக்கு மத்தியில் வேகமாய் நடந்து வந்து கொண்டிருந்த அந்த அழகான சிங்கப்பூர் அழகியை வழி மறிக்கிற மாதிரி எழுந்து நின்றான் கணேசன்.

''எனி திங்க் இம்பார்ட்டெண்ட்?''

அவள் சிரித்தாள்.

''நத்திங்... ஏ டைனமைட் ரூமர்...'' - அலட்சியமாய் சொல்லிவிட்டு நகர - கணேசன் பயமாய் எச்சில விழுங்கினான். தேவியிடம் திரும்பி சொன்னான்.

''எ...என்னமோ... வெடிகுண்டு வதந்தியாம்.''

''அதை இப்படி சிரிச்சுகிட்டே சொல்லிட்டு போறாளே?''

''இது மாதிரி நியூஸெல்லாம் அவங்களுக்கு பழக்கப்பட்டு போயிருக்கலாம். எவனாவது ஒருத்தன் ஏதாவது ஒரு டெலிபோன் பூத்துல பூந்து - ஃபிளைட்ல வெடிகுண்டு இருக்குன்னு சொல்லிட்டு ரிஸீவரை வெச்சுடுவான். இங்கே ஏர்ஃபோர்ட்ல இருக்கிறவங்க சோதனை அது இதுன்னு தவிச்சு போறது சகஜம்...''

''அப்பா...''

ரவிப்ரகாஷ் கணேசனின் சட்டையை பிடித்து இழுத்தான். கணேசன் எரிச்சலாய் திரும்பினான். ''என்னடா?''

''இந்தப் பட்டன் எதுக்கப்பா?''

கணேசன் முறைக்க -

''சரிப்பா... நான் கேட்கலை...'' - தேவிக்கு பின்னால் ஒண்டிக் கொண்டான். பயணிகள் சலசலப்போடு சீட்டுகளை விட்டு எழுந்து கொண்டிருந்தார்கள்.

## 17

மெட்டல் டிடெக்டர்கள் ஃபிளைட் கோல்டன் ஹெவனை அங்குலம் அங்குலமாய் முகர்ந்து பார்த்துக் கொண்டிருக்க - விவேக்கும் கோகுல்நாத்தும் - ஃபிளைட்டின் மையத்தில் நின்றிருந்தார்கள். செக்யூரிடி ஆபீஸர் ஷெனாய் - உதட்டைப் பிதுக்கிக் கொண்டே விவேக்கிடம் வந்தார். தொப்பியைக் கழற்றி வியர்வை வழித்தபடி சொன்னார்.

''எவனோ விளையாடியிருக்கிறான்...''

''யூ ஆர் ராங்... மிஸ்டர் ஷெனாய்...! விளையாடுகிற நோக்கம் அவனுக்கு இருந் திருந்தால் - அந்தப் பேர்வழி நேரிடையாகவே... ஏதாவது ஒரு டெலிபோன் பூத்துக்குள் புகுந்து - ஏர் ஃபோர்ட்டுக்கு போன் பண்ணி - ஃபிளைட் கோல்டன் ஹெவனில் டைனமைட் வைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லியிருப்பான். ஆனால் இந்த விஷயம் கசிந்த விதம் மிகவும் ஸீரியஸானது. யாரோ இரண்டு பேர் சங்கேத பாஷையில் பேசிக் கொண்ட விஷயம் இது. இதை நான் அலட்சியப்படுத்துவதற்கில்லை.''

ஷெனாய் புன்னகைத்தார்.

''மிஸ்டர் விவேக்! டெலிபோனில் யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்ட சங்கேத பாஷை இந்த ஃபிளைட்டைத்தான் குறிக்க வேண்டும் என்பதில்லையே? அவர்கள் வேறு ஏதாவது காரணத்திற்காகவும் பேசியிருக்கலாம். கடத்தல்



தொழில் செய்பவர்கள் பெண்களுக்கு சொர்க்கம் என்றும் - போதை மருந்துக்கு '320' என்றும் - போலீஸ் துறைக்கு 'வாண வேடிக்கை' என்றும் குறிப்பிடுவார்கள். ஒரு வேளை இந்த விவகாரம் அவர்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்...''

களைத்த முகங்களோடும் மெட்டல் டிடெக்டர்களோடும் மற்ற அதிகாரிகள் ஒவ்வொரு வராய் ஷெனாயை வந்து சூழ்ந்தார்கள். ஒரே மாதிரியான பதிலைச் சொன்னார்கள்.

''வெறும் வதந்தி சார்...''

''கண்ட்ரோல் அறைக்கு தகவல் கொடுத்து, விடுங்கள்...''

''எஸ்... ஸார்.''

விவேக் ஷெனாயை ஏறிட்டான்.

''ஒரு சிறிய கோரிக்கை...''

''எஸ்... ப்ளீஸ்...''

''நானும் கோகுல்நாத்தும் உள்ளே வரும் ஒவ்வொருபயணியையும் பார்க்க விரும்பு கிறோம். பயணிகளில் யாராவது சட்ட விரோதமான ஆசாமியிருந்தால் - எங்களுக்குத் தெரிய வாய்ப்புண்டு அல்லவா?''

''தாராளமாக நீங்கள் பார்க்கலாம்... உன்னிப்பாய் பயணிகளைப் பார்ப்பதற்கு வசதியாய் - ட்ரிப்ஷீட் படி ஒவ்வொரு பயணியாய் ஃபிளைட்டுக்கு அனுப்புகிறோம்.''

''தாங்க்யூ...''

## 18

லௌன்ஞ்சில் போடப்பட்டிருந்த வினைல் நாற்காலிகளில் - பயணிகள்

வரிசையாய் உட்கார்ந்திருக்க - ஸ்பீக்கரில் அறிவிப்பு வெளியானது.

"கோல்டன் ஹெவன் விமானம் இன்னமும் ஒரு மணி நேர அவகாசத்திற்குள் புறப்பட உள்ளது. விமானத்தில் வெடிகுண்டு இல்லை என்று தீர்க்கமாய் தெரிய வந்துள்ளது. இருப்பினும் பயணிகளின் பாதுகாப்புக்காக - போலீஸாரால் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று - ட்ரிப் ஷீட்டிலிருந்து - உங்கள் பெயர் வாசிக்கப்பட்ட பின்பு தான் நீங்கள் ஃபிளைட்டை நோக்கிப் போக வேண்டும். மற்றவர்கள் பெயர்களை அறிவிப்பு செய்யப்படும் வரைக்கும் அவர்கள் லௌன்ஞ்சிலேயே அமர்ந்திருக்க வேண்டுகிறோம்."

அறிவிப்பு நின்றது.

தேவி கணேசனிடம் சலித்துக் கொண்டாள்.

"என்னங்க இது? இங்கேயே ராத்திரி ஆயிடும் போலிருக்கே?"

"லேட்டானா... என்ன? ஃபிளைட்ல வெடிகுண்டு இருக்குன்னு வதந்தி வந்த பின்னாடி ஏர்ஃபோர்ஸ் அதாரிடீஸ் சும்மா இருப்பாங்களா என்ன? எல்லா பார்மா லிடீஸையும் முடிச்சுகிட்டுதான் ஃபிளைட்டுக்கு க்ளியரன்ஸ் குடுப்பாங்க..."

ஸ்பீக்கரில் ஒவ்வொரு பெயராய் சொல்லி கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். "மிஸ்டர் மாத்யூ அண்ட் ஹிஸ் பேமிலி. அண்ட் தென் டாக்டர் புன்னம்சந்தர் ப்ரம் செக்கந்திராபாத். சீட் நெம்பர்ஸ் லெவன், ட்வெல்வ், தர்ட்டீன், ஃபோர்ட்டீன்..."

"நம்ம பேரை எப்போ கூப்பிடுவாங்கன்னு தெரியலையே?"

"டாக்ஸியில் அப்படி பறந்துகிட்டு வந்திருக்க வேண்டாம்..."



"யார்க்குத் தெரியும்? இப்படியெல்லாம் லேட்டாகும்ன்னு..."

"அப்பா..."

மடியில் வீடியோ கேமை வைத்துக் கொண்டு பட்டன்களைத் தட்டிக் கொண்டிருந்த ரவிப்ரகாஷ் கூப்பிட்டான்.

"என்னடா?"

"இந்த பட்டன் எதுக்கப்பா?"

"அழுத்தித்தான் பாரேண்டா..."

"பார்த்தேன்பா... ஒண்ணுமே ஆகலை..."

"பாவம் குழந்தைக்கு சொல்லித்தான் குடுங்களேன். எத்தனை தடவை கேட்டுட்டான்."

"எங்கியோ ரோட்டோரமா கிடந்ததை எடுத்து வெச்சுகிட்டு என்னோட உயிரை வாங்கறான்... எந்த பட்டன்டா?"

"இதான்..."

வீடியோ கேமை வாங்கிய கணேசன் அந்த பட்டனை அழுத்திப் பார்த்தான் - மூன்றாவது தடவையாக பட்டன் அழுத்தப்பட்டது.

## 19

ஃபிளைட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த ஒவ்வொருவரையும் உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள் விவேக்கும் கோகுல்நாத்தும். லேசாக சந்தேகப்பட்டாலும் நிறுத்தி விசாரித்தார்கள். பாஸ் போர்ட்டையும் - விசாவையும் சரி பார்த்தார்கள்.

சூப்பர் ஸ்டார் சூர்ய கலாதரன் உள்ளே வந்ததும் - விவேக்கை நெருங்கி கையை

நீட்டினான். "உங்களைப் பத்தி நிறைய கேள்விப் பட்டிருக்கேன். பேப்பர்ல போட்டோவையும் பார்த்திருக்கேன். ஆனா நேர்ல பார்க்கிறது இதுதான் முதல் தடவை..."

"நானும் உங்களை ஸ்க்ரீன்ல பார்த்தது தான்... அரிதாரம் பூசாமே அழகாவே இருக்கீங்க..."

"தாங்க்யூ! வெடிகுண்டு வெறும் புரளி தானே?"

"புரளியாத்தான் இருக்கணும்ன்னு கவலைப் படறோம்..."

"இது புரளி தான் மிஸ்டர் விவேக்! இதுக்காகவே ஒரு கும்பல் இருக்கு. ஒரு ரூபாயை செலவு பண்ணி - புரளியைக் கிளப்பி விட்டு - மற்றவர்களின் சந்தோஷத்தைப் பறிக்கிறதில் அந்த கும்பலுக்கு ஒரு சந்தோஷம்..."

"விஷ் யூ... ஏ.. ப்ளெஸண்ட் ஜர்ணி..." - விவேக் புன்னகையோடு சூர்ய கலாதரனை வி.ஐ.பி.கிளாஸிற்கு அனுப்பி வைத்தான். தொடர்ந்து படப்பிடிப்பு குழுவைச் சேர்ந்தவர்கள் வரிசையாய் வர ஆரம்பித்தார்கள்.

நிமிஷங்கள் கரைய - உள்ளே சீட்கள் நிரம்பிக் கொண்டிருந்தன. பத்து நிமிஷங்களுக்கு பின் -

விவேக் கோகுல்நாத்திடம் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தான்.

"கோகுல்நாத்! வருகிற ஆளை மடக்கி விசாரியுங்கள்."

அவர் மடக்கினார்.

"யுவர் குட் நேம் ப்ளீஸ்?"

"மக்கின்ஸி..."

"நேட்டீவ்?"

"சிங்கப்பூர்..."



"ஷோ... மீ... யுவர் பாஸ்போர்ட்?"

மக்கின்ஸி தன் பாஸ்போர்ட்டை கோகுல் நாத்திடம் காட்ட - விவேக் அவர்க்குப் பின்னால் நின்றிருந்த நபரையும் - ஒரு வயதான பெண்ணையும் - இளம் பெண்ணையும் பார்த்தான். முகத்தில் பாமரத்தனம் தெரிந்த அந்தப் பெண்ணை ஏறிட்டான்.

"உன்னோட பேரு?"

"சுகந்தி..."

"இவங்க..."

"என்னோட அம்மா..."

"பாஸ் போர்ட்ஸ் எடுங்க பார்க்கலாம்..."

அவர்களுக்கு பக்கத்தில் நின்றிருந்த நபர் குறுக்கிட்டார். "ஸார் நான் இவங்க லாயர்... இவங்க பாஸ்போர்ட்ஸ் என்கிட்ட தான் இருக்கு..."

"ப்ளீஸ்... கிவ் மீ..."

வக்கீல் பாஸ்போர்ட்டுகளை எடுத்துக் காட்டினார். விவேக் அவைகளை வாங்கி பார்வையிட்டுக் கொண்டே கேட்டான்.

"சிங்கப்பூர் எதுக்காக போறீங்க?"

வக்கீல் ஒரு இரண்டு நிமிஷத்தை செலவழித்து - விவரத்தைச் சொல்ல, விவேக் வியந்தான். "பத்து கோடி ரூபாய் சொத்துக்கு இவங்க தான் வாரிசுகளா?"

"ஆமா... ஸார்..."

"சிங்கப்பூரிலிருந்து இந்தத் தகவலைக் கொண்டு வந்தது மிஸ்டர் மக்கின்ஸி தானே?"

"ஆமாம்..."

விவேக் மக்கின்ஸியிடம் திரும்பினான். "லட்சுமியம்மாவின் அண்ணன் உயிலை நீங்கள் படித்துப் பார்த்தீர்களா?"

''எஸ்...''

''எல்லா சொத்துக்களுமே... இந்த இருவர்க்கும்தான் எழுதப்பட்டிருந்ததா?''

''ஆமாம்...''

''இறந்து போன லட்சுமியம்மாவின் அண்ணனுக்கு வேறு வாரிசுகள் யாராவது இருக்கிறார்களா?''

''சட்டபூர்வமான வாரிசுகள் இல்லை...''

''அப்படியென்றால்?''

''அவர் கல்யாணமாகாதவர். ஆனாலும் இரண்டு சிங்களப் பெண்களோடு வாழ்க்கை நடத்தினார். அவர் மூலமாய் அந்த பெண்களுக்கு குழந்தைகளும் பிறந்தன. ஆனால் கடந்த ஆறு மாத காலமாக அவர் அந்தப் பெண்களைத் தேடிப் போகவில்லை.''

''காரணம்?''

''அந்தப் பெண்கள் வேறொரு நபரோடு தொடர்பு வைத்திருப்பதாக இவர்க்கு செய்தி கிடைத்ததின் விளைவாக இருக்கலாம்...''

''மிஸ்டர் மக்கின்ஸி! பத்து கோடி ரூபாய் சொத்துகளுக்கு அதிபதியாகப் போகும் லட்சுமியம்மாவுக்கும் சுகந்திக்கும் எதிரிகள் உருவாகியிருப்பார்கள் இல்லையா?''

''ஆமாம்...''

''அந்த எதிரிகள் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''நீங்கள் சிங்கப்பூரை விட்டுப் புறப்படும்போது - உங்களைப் பின் தொடர்ந்து யாராவது வந்தார்களா?''

''நான் கவனிக்கவில்லை...''



''நீங்கள் சிறிது எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது மிக மிக அவசியம் மிஸ்டர் மக்கின்ஸி.''

''இவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் சிங்கப்பூர் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. நாங்கள் இருக்கைகளுக்குப் போகலாமா?''

''ப்ளீஸ்...'' என்றான் விவேக்.

அவர்கள் நான்கு பேரும் நகர்ந்ததும் - கோகுல்நாத் கேட்டார்.

''என்ன விவேக்? இவங்ககிட்ட மட்டும் நீளமான விசாரணை...''

''லட்சுமி அம்மாளுக்கும், சுகந்திக்கும் வந்திருக்கிற இந்த திடீர் அதிர்ஷ்டம் யார்க்காவது அஜீர்ணமாயிருக்கலாம். அந்த அஜீர்ணம் காரணமா அவங்களைத் தீர்த்துக்கட்ட இந்த கோல்டன் ஹெவன் விமானத்தையே தகர்க்க நினைச்சிருக்கலாமல்லவா?''

''மே...பி... விவேக்...''

''நீங்க உடனடியா ஒரு காரியம் பண்ணனும் கோகுல்நாத்.''

''என்ன?''

''ஏர்ஃபோர்ட் லௌன்ஞ்சுக்குப் போங்க. பாஸஞ்சர்ஸை வழியனுப்ப வந்திருக்கிற பார்வையாளர்களை நோட் பண்ணுங்க... சிங்கப்பூர்த்தனமா ஆண் முகமோ... பெண் முகமோ எது கண்ணுக்குத் தெரிஞ்சாலும் சரி... க்ளோசப் அப்ஸர்வ் பண்ணுங்க... ஃப்ளைட் புறப்பட்டதும் அவங்க நடவடிக்கைகள் பதட்டமாவோ... வித்தியாசமாவோ... இருந்தா... ஆளை மடக்குங்க... ஃப்ளைட் ரன்வேயை விட்டு ஆகாயத்துல தாவறதுக்கு முந்தி ஆள் மாட்டிக்கிட்டா ஃப்ளைட்டை காப்பாத்திடலாம்.''

தலையாட்டிவிட்டு கோகுல்நாத் நகர்ந்தார்.

# 20

''இந்த பட்டன் எதுக்குன்னு தெரியலை! நீ இந்த நோண்டாமே மத்த பட்டனைத் தொட்டு விளையாடு...'' - கணேசன் ரவிப்பிரகாஷிடம் எரிச்சலாய்ச் சொல்ல - தேவி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''காரணமில்லாமே... எதுக்காக அந்த பட்டனை வெக்கணும்?''

''அவன் மாதிரி நீயும் ஏண்டி உயிரை எடுக்கறே? ஃபிளைட்ல வெடிகுண்டுன்னு அவனவன் நாக்குல தண்ணி இல்லாமே அலமந்துட்டிருக்கான்... உனக்கும் உம் புள்ளைக்கும் கொஞ்சமாவது சீரியஸ்னெஸ் இருக்கா...?''

ஸ்பீக்கரில் அனௌன்ஸ்மெண்ட் வந்தது. ''மிஸ்டர் அண்ட் மிஸஸ் கணேசன். மாஸ்டர் ரவிப்பிரகாஷ்... சீட் நெம்பர்ஸ்...''

கணேசன் மனைவியையும், மகனையும் எழுப்பிக்கொண்டு - ஃபிளைட்டை நோக்கி நடந்தான். ரவிப்பிரகாஷ் பட்டன்களைத் தட்டி - கவாஸ்கர்க்கும் - இம்ரான்கானுக்கும் ரன்களைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

''அய்... சிக்ஸர்...''

பாகிஸ்தான் தரப்பில் இருந்த பட்டனைத் தட்ட - ரவிப்பிரகாஷ் கத்தினான்.

''இன்சமாம் அவுட்...''

''பேசாமே வாடா...''

''அப்பா... அப்துல் ரசாக் ஆட வர்றான்...''



''இவன் கூட பெரிய ரோதனையாப் போச்சு...''

''விடுங்க... அவன் விளையாட்டிட்டு போறான்...''

ஸ்டேர்ஸில் ஏறினார்கள். ஃபிளைட்டுக்குள் - நுழைந்தபோது விவேக் அவர்களை மறித்தான். பார்வை ரவிப்பிரகாஷின் கையிலிருந்த வீடியோ கேமின் மேல் விழுந்தது.

''என்ன அது?''

''கிரிக்கேட்டியர் வீடியோ கேம் ஸார்'' - கணேசன் சொல்ல, விவேக் அதை வாங்கிப் பார்த்துவிட்டு சிறுவனிடமே கொடுத்தான்.

''சிங்கப்பூர் எதுக்காகப் போறீங்க?''

''என் ஒய்ப்போட தாய்மாமன் ஒருத்தர் சிங்கப்பூர்ல ஒரு பெரிய வேலையில் இருக்கார் ஸார்... இந்த மாசத்தோட அவர் ரிடையராகப் போறாராம். ரொம்ப நாளா சிங்கப்பூரைப் பார்க்க வாங்கன்னு கூப்பிட்டுகிட்டு இருந்தார்... அதான் புறப்பட்டோம்...''

''நீங்க சென்னையில என்ன வேலை பார்க்கறீங்க...?''

''ஒரு பிரைவேட் பைனான்ஸ் கம்பெனியில அக்கௌண்டண்டா இருக்கேன் ஸார்...''

''அப்பா! டிராவிட் அவுட்...''

''சீட்டுக்குப் போங்க...''

ரவிப்பிரகாஷ் விவேக்கை ஏறிட்டான். ''அங்கிள்!''

''என்ன...?''

''உங்களுக்கு இந்த கிரிக்கெட்டியர் வீடியோ கேம் தெரியுமா? இதுல இந்த பட்டன்... எதுக்காக வெச்சிருக்காங்கன்னு...''

கணேசன் ரவிப்பிரகாஷின் காதைப் பிடித்தான். ''ஆரம்பிச்சுட்டியா? உன்னோட தொண தொணப்பை...! ஸாரி... ஸார்... பையனுக்கு வீடியோ கேம்ன்னா பைத்தியம்...''

''இட்ஸ் ஓ.கே... பையனை சீட்டுக்கு கூட்டிட்டுப் போங்க...''

அவர்கள் நகர்ந்து போனதும் - ஃபிளைட்டுக்குள் அடுத்ததாய் நுழைந்த அந்த இளைஞன், அந்த இளம் பெண், ஒரு பெரியவர் - இவர்களை மறித்தான் விவேக்.

''சிங்கப்பூர் எதுக்காகப் போறீங்க?''

''இவர் ஒரு ஹார்ட் பேஷண்ட்... ஹி நீட்ஸ் ஒன் ஆபரேஷன்...''

''உங்க பேரு...?''

''தாரிகா... ஹி ஈஸ் மை ஹஸ்பெண்ட்... ஹி... ஈஸ்... மை ஃபாதர்!''

''மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் இருக்கா...?''

தாரிகா தன் அப்பாவைப் பார்க்க - அவர் தன் கையிலிருந்த ஃப்ரீப்கேஸைப் பிரித்து - ஒரு பைலை எடுத்து நீட்டினார். விவேக் அதை வாங்கிப் புரட்டினான்.

அப்பல்லோ ஹாஸ்பிடலின் மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் கத்தை கத்தையாய் தெரிந்தது.

''வேர் ஆர் யூ புட் அப் இன் சென்னை?''

''பாரதி நகர்...''

பைலைப் புரட்டிப் பார்த்துவிட்டு - தாரிகாவிடம் நீட்டினான் விவேக். அவளுடைய கணவனின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''விஷ்... யூ... எ... ஸ்பீடி ரெகவரி...''

''தாங்க்... யூ... ஸார்...''





## 21

ஃபிளைட் மெய்ண்டனன்ஸ் சௌத்ரியின் அறைக்குள் கலவரமாய் நின்றிருந்தார்கள் குருவும் காசியும். சௌத்ரி வியர்வை முகமாய் உலவிக் கொண்டிருந்தார்.

''குரு! ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டை நீ பார்த்தாயா? செத்தது திரிவேதியா இல்லே... வேற யாராவதா?''

''திரிவேதிதான் ஸார்... ஃபிளைட் புறப்பட லேட்டாகும்ன்னு தெரிஞ்சதுமே திரிவேதிக்கு தகவல் சொல்றதுக்காக புறப்பட்டுப் போனேன். ஏர் ஃபோர்ட்டிலிருந்து சரியா ஒரு கிலோ மீட்டர் தூரத்துல... ஒரு மரத்தோடு மோதி... ஸ்பாட்டிலேயே அவுட்... போலீஸ் பாடியை எடுத்து வெளியே போட்டிருந்தாங்க...''

சௌத்ரி முகம் இருண்டு போய் வலது கை முஷ்டியை இடது உள்ளங்கையில் குத்திக் கொண்டார். ''இப்ப... என்ன பண்றது? ஃபிளைட்டுக்குள் வெடிகுண்டை ஃபிக்ஸ் பண்ணியிருக்கோம். ரிமோட் கண்ட்ரோல் பொருத்தப்பட்ட கிரிக்கெட்டியர் வீடியோ கேம் ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல மாட்டிகிட்டு இருக்கு...''

காசிம் குறுக்கிட்டான். ''போலீஸ் கைக்கு அந்த வீடியோ கேம் கிடைச்சாலும்... அதனாலே நமக்கு எந்த ஆபத்தும் இல்லையே ஸார்...''

''நமக்கு ஆபத்து இல்லைதான் காசிம். ஆனா ஒரு விஷயத்தை நினைச்சுப் பாரு... பார்ட்டி கிட்டேயிருந்து பணத்தை வாங்கி திரிவேதி கிட்டே குடுத்திருக்கோம். ஃபிளைட் வெடிச்சாத் தான் மீதி பணத்தை பார்ட்டிகிட்டேயிருந்து நாம வாங்க முடியும். ஃபிளைட் வெடிக்கலைன்னா -

திரிவேதிக்கு நாம அட்வான்ஸா கொடுத்த பணத்தைப் பார்ட்டிக்குத் திருப்பித் தரணும். இல்லேன்னா பார்ட்டி சும்மா இருப்பாங்களா?''

குருவுக்கும் காசிமுக்கும் விபரீதம் புரிந்தது.

''இ... இப்ப... என்ன ஸார்... பண்றது?''

''ஃப்ளைட் புறப்பட்டுப் போறதுக்குள்ளே... ரிமோட் கண்ட்ரோல் பொருத்தப்பட்ட அந்த கிரிக்கெட்டியர் வீடியோ கேம் நம்ம கைக்கு வரணும்...''

''இந்நேரம் அது போலீஸ் கையில மாட்டியிருக்கும் ஸார்... நாம எப்படி அதை நெருங்க முடியும்...?''

''கொஞ்சம் புத்திசாலித்தனத்தோடும் - கை நிறைய பணத்தோடும் - அந்த ஆக்ஸிடெண்ட் கேஸை டீல் பண்ணுகிற இன்ஸ்பெக்டரை உடனடியா பார்த்து - வீடியோ கேமுக்கு ஒரு விலை பேசி வாங்கணும்...''

''ஸார்...''

''தெரியும்... இது ரிஸ்க்தான்... இதை விட்டா வேறு வழியில்லை... ஒரு கிரிக்கெட்டியர் வீடியோ கேமுக்கா... நாம ஏன் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கிறோமுன்னு இன்ஸ்பெக்டர் சந்தேகப் படலாம். அவர் சந்தேகப்படாத மாதிரி... ஏதாவது ஒரு காரணத்தை... நாம சொல்லியாகணும்... காசிம்! இந்த காரியத்துக்கு நீ போயிட்டு வா...''

சௌத்ரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே - மேஜை மேலிருந்த இண்டர்காம் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தார்.

''எஸ்...''

''மிஸ்டர் சௌத்ரி... ஒருநிமிஷம் என்னோட... ரூமுக்கு வந்துட்டுப் போங்க...'' - செக்யூரிட்டி ஆபீஸர் ஷெனாய் பேசினார்.



''வர்றேன் ஸார்...''

சௌத்ரி ரிஸீவரை வைத்துக்கொண்டே எழுந்தார். ''குரு! காசிம்! என்னை எஸ்.ஓ. கூப்பிடறார். அநேகமா ஃப்ளைட்டுக்கு க்ளியரன்ஸ் தர்றது சம்பந்தமா என்கிட்டே யோசனை கேட்பார். நான் எப்படியும் ஒரு மணி நேரத்தை இழுத்தடிப்பேன். அதுக்குள்ளே காசிம் அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து - காரியத்தை முடிக்கணும்...''

''பர்மிஷன் ஸ்லிப்ல என்ன காரணத்தை ஸார் எழுதறது...?''

''ஏர் கிராப்ட் டூல்ஸ் பாக்டரியில்... ப்ரொப்பல்லர் விங்க்கை சரி பார்க்கணும்ன்னு எழுதிட்டு கிளம்பு... ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டுக்கு போகிற வழியிலதானே பாக்டரியும் இருக்கு... பாக்டரியில் ஒரு பத்து நிமிஷத்தைச் செலவு பண்ணிட்டு - உடனே ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டுக்குக் கிளம்பிடு...''

''சரி ஸார்...''

''நான் போய் எஸ்.ஓ.கிட்டே பேசிட்டிருக்கேன். நீ ஒரு ரெண்டு நிமிஷம் கழிச்சு பர்மிஷன் ஸ்லிப்பை எழுதிட்டு வா... நான் அவர் முன்னாடியே... உன்னை பர்மிஷன்ல அனுப்பறேன்...''

காசிம் தலையாட்டினான்.

## 22

சௌத்ரி எஸ்.ஓ.வின் அறைக்குள் நுழைந்தார். மின் விசிறி அரை வட்டமாய் சுழன்று கொண்டிருக்க - அதன் சுழற்சிக்கு மத்தியில் உட்கார்ந்திருந்தார்கள் விவேக்கும், கோகுல்

நாத்தும். கைகளை ஆட்டி எதையோ தீர்க்கமாய் பேசிக் கொண்டிருந்த ஷெனாய் - பேச்சை நிறுத்திவிட்டு விவேக்கிடம் சொன்னார்.

"ஹி ஈஸ் மிஸ்டர் சௌத்ரி... மெய்ன்டனென்ஸ் ஆபீஸர்..." விவேக்கும், கோகுல்நாத்தும் புன்னகைத்து கை குலுக்கினார்கள்.

சௌத்ரி உட்கார்ந்ததும் - ஷெனாய் சொன்னார்.

"மிஸ்டர் சௌத்ரி...! திஸ் போலீஸ் மென் வாண்ட்ஸ் டு ஸ்பீக் வித் யூ..."

"எஸ்! வெல்கம்!"

விவேக் அவரை ஏறிட்டான். "ஃப்ளைட்டில் வெடிகுண்டு இருப்பதாக நமக்குத் தகவல் வந்திருக்கிறது. மெட்டல் டிடெக்டரை வைத்து விமானத்தை அலசிவிட்டோம். ஆனால் உள்ளே வெடிகுண்டு பொருத்தப்படவில்லை என்று செக்யூரிட்டி ஃபோர்ஸ் சொல்கிறது. இதை நம்பலாமா மிஸ்டர் சௌத்ரி?"

"தாராளமாய் நம்பலாம். செக்யூரிடி ஃபோர்ஸின் ரிப்போர்ட் நூற்றுக்கு நூறு சரியாகத்தான் இருக்கும்."

"ஃப்ளைட் டெட் பொஸிஷனில் இருக்கும் போது அதை கவனிக்க வேண்டியது உங்கள் பொறுப்புதானே?"

"ஆமாம்... அதை டொமஸ்டிக்கிற்கு இழுத்துப் போய் - ஃப்ளைட்டின் ஒவ்வொரு பாகத்தையும் செக் செய்து - ரிப்போர்ட் எழுதி வைக்க வேண்டியது என் வேலை. டெக்னிகல் ஃபால்ட்ஸ் ஏதாவது இருந்தால் டெக்னீஷியன்களுக்கு 'நோட்' அனுப்பி இன்பார்ம் பண்ண வேண்டியதும் என் வேலைதான்..."

"இன்றைக்கு எத்தனை மணி சுமார்க்கு ஃப்ளைட்டை டொமஸ்டிக்கிற்கு கொண்டு போனீர்கள்?"



"இரண்டு மணி..."

"இன்றைய மெயின்டனன்ஸ் பரிசோதனையின் போது ஃப்ளைட்டுக்குள் ஏதாவது மாற்றமாய் உணர்ந்தீர்களா?"

"இல்லை..."

விவேக் அடுத்த கேள்விக்காக - வாயைத் திறந்த விநாடி -

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"எஸ்... கம்மின்..." ஷெனாய் குரல் கொடுத்தார்.

குரல் கொடுத்ததுமே -

காசிம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். சௌத்ரி முகத்தை இறுக்கமாய் வைத்துக்கொண்டு "என்ன காசிம்?" என்றார்.

"ஸார்! ஏர் கிராப்ட் டூல்ஸ் பேக்டரிக்குப் போய் ஏ.எல்.176 ப்ரொப்பல்லர் ரொடேஷனைப் பார்க்கணும்..." காசிம் விவேக் பக்கமாய் வந்து நின்றான்.

"பர்மிஷன் அவுட் பாஸ் ஸ்லிப்பை கொண்டு வந்திருக்கீங்களா...?"

"கொண்டு வந்திருக்கேன் ஸார்..." சொன்ன காசிம் சௌத்ரியிடம் ஸ்லிப்பை நீட்ட - சௌத்ரி ஷெனாயிடம் அதைக் காட்டி கேட்டார்.

"ஸார்...! காசிமை அனுப்பிடலாமா?"

"நோ ப்ராப்ளம்! அனுப்புங்க..."

சௌத்ரி ஸ்லிப்பில் கையெழுத்திட்டு - காசிமிடம் நீட்டிக்கொண்டே சொன்னார். "எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. பாக்டரியில இருந்து அந்த ப்ரொப்பல்லர் ரொடேஷன் சரியா வருகிற வரைக்கும் இருந்து பார்த்துகிட்டு போங்க... காசிம்..."

"எஸ்... ஸார்..."

காசிம் ஸ்லிப்போடு நகர்ந்து போனதும் - விவேக் சௌத்ரியிடம் கேட்டான். ''இங்கே இவர்க்கு என்ன டெஸிக்னேஷன்?''

''மெயின்டனென்ஸ் அஸிஸ்டெண்ட்... எனக்குக் கீழே வேலை பார்க்கிற இரண்டு பேரில் இவரும் ஒருவர்...''

ஷெனாய் சௌத்ரியை ஏறிட்டார். ''மிஸ்டர் சௌத்ரி! ஃப்ளைட்டுக்கு க்ளீயரன்ஸ் கொடுக்க இன்னமும் ஒரு மணி நேரமாகும். பாசஞ்சர்ஸ் கொண்டு வந்த லக்கேஜ்களை மெட்டல் டிடெக்டர்கள் முகர்ந்து கொண்டிருக்கின்றன. இன்த மீன் வொய்ல் ஃப்ளைட்டை நீங்க பார்வையிட விரும்புகிறீர்களா?

''நோ...'' - என்று தலையாட்டியவர் தழைந்த குரலில் சொன்னார். ''ஸார்... சமீப காலமா இந்த வெடிகுண்டு புரளிகள் அதிகம். இந்த மாதத்தில் மட்டும் பத்து வெடிகுண்டு மிரட்டல் போன் கால்களை ரிஸீவ் பண்ணியிருக்கிறோம். எல்லா புரளிகளுமே நேரத்தைச் சாப்பிட்டவை. இந்த வெடிகுண்டு புரளிகளை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியமே இல்லை,

விவேக் குறுக்கிட்டான்.

''யூ ஆர்... ராங்... மிஸ்டர் சௌத்ரி... வெடிகுண்டுகளை விமானத்தில் பொருத்தும் விஷமக்காரர்களின் விளையாட்டு இது. வெடிகுண்டுகளை வைத்திருப்பதாக வதந்திகளைக் கிளப்பி - விமான நிலைய அதிகாரிகளைச் சோர்வடையச் செய்து - பிறகு திடீரென்று ஒரு நாள் நிஜமாகவே வெடிகுண்டைப் பொருத்தி - விமானத்தை வெடிக்கச் செய்யும் முயற்சியாகக் கூட இருக்கலாம்... இன்றைக்கு நாம் கேள்விப்படுகிற புரளி - ஒரு க்ராஸ்டாக் மூலமாய் கிளம்பியது. சொர்க்கம் ஹவுஸ்ஃபுல், 320 பேர், வாண வேடிக்கை, சாயந்தரம் ஆறு மணி - இந்த வார்த்தைகள் கோல்டன் ஹெவனைத்தான்



குறிக்கின்றன. மேலும் இந்த ஃப்ளைட்டில் இன்றைக்கு பயணப்படுகிற - முக்கியமான வி.ஐ.பி. சூப்பர் ஸ்டார் சூர்யகலாதரன். அவருடைய உயிரைப் பறிக்கவும் விஷமிகள் விரும்பியிருக்கலாம். அதேபோல் ஒரே ராத்திரியில் பத்து கோடி ரூபாய் சொத்துக்களுக்கு வாரிசுகளாகிவிட்ட இரண்டு பெண்கள் இந்த விமானத்தில் பயணம் செய்கிறார்கள். அந்த இரண்டு பெண்களுக்கும் வேண்டாத இல்லீகல் வாரிசுகள் - அவர்களைத் தீர்த்துக்கட்ட இந்த விமானத்தை வெடிவிபத்துக்கு உள்ளாக்க நினைத்திருக்கலாம்...''

சொல்லிக்கொண்டே விவேக் எழுந்தான்... ''மிஸ்டர் ஷெனாய்! எனக்கு இன்னமும் நம்பிக்கை வரவில்லை. நான் சொல்கிற வரைக்கும் ஃப்ளைட்டுக்கு க்ளீயரன்ஸ் தராதீர்கள். நானும் கோகுல்நாத்தும் லௌன்ஞ்சில் இருக்கும் பயணிகளை வழியனுப்ப வந்தவர்களை - கண்காணிக்கப் போகிறோம். எதிரி இந்தக் கோட்டைக்குள்ளேதான் இருக்கிறார்கள் என்பது என் கணிப்பு. என் கணிப்புகள் என்றைக்குமே தவறாகிப் போனதில்லை...''

விவேக்கும் கோகுல்நாத்தும் - சௌத்ரி, ஷெனாயிடம் கைகளை குலுக்கிவிட்டு வெளியே வந்தார்கள்.

ரன்வேயில் கோல்டன் ஹெவன் கட்டிப்போட்ட ராட்சஸ பட்சி மாதிரி நின்றிருக்க - லௌன்ஞ்சில் - வழியனுப்ப வந்தவர்களின் கூட்டம் அப்படியே இருந்தது.

## 23

ஏர் ஹோஸ்டஸிடம் 'காப்பி' வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த தாரிகா,

''அங்கிள்'' என்ற குரல் கேட்டு திரும்பினாள். இரண்டு சீட் தள்ளி உட்கார்ந்திருந்த அந்த சிறுவன் கையில் வீடியோ கேமை வைத்துக் கொண்டு - தன் கணவனின் கையைத் தொட்டுக் கூப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளுடைய கணவன் தியாகு - மெல்ல புன்னகைத்து பையனின் கன்னத்தில் தட்டினான்.

''என்ன தம்பி...?''

''நீங்க இந்த வீடியோ கேம் ஆடியிருக்கீங்களா அங்கிள்?''

''கொண்டா பார்க்கலாம்...?''

வீடியோ கேமை - தியாகுவிடம் நீட்டினான் ரவிப்பிரகாஷ்.

கணேசன் குறுக்கிட்டான். ''ஸார்... பையன் தொந்தரவு தர்றானா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை...'' என்று சிரித்த தியாகு, வீடியோ கேமைப் பார்த்துவிட்டு - ரவிப்ரகாஷிடம் திரும்பினான்.

''கிரிக்கெட்டியர் வீடியோ கேம் தானே? ஆடியிருக்கேன்...''

''நிஷமா...?''

''ம்...''

''அப்போ... இந்த பட்டன் எதுக்கு அங்கிள்?''

தியாகு அந்த பட்டனைப் பார்த்தான். எல்லாப் பட்டன்களுக்கும் மேலே ஒவ்வொரு ஆங்கில எழுத்து உட்கார்ந்திருக்க - அந்த குறு மிளகு சைஸில் இருந்த கறுப்பு பட்டன் மட்டும் கீழே அநாதையாய் தெரிந்தது.

''அழுத்திப் பார்த்தியா?''

''பார்த்தேன்... கேம்ல எதுவுமே ஆகலை... அங்கிள்! இந்த 'எஸ்' பட்டன் ஸ்டார்ட்டிங்... 'பி'



பட்டன் பௌலிங்... 'ஓ' பட்டன் அவுட்... ஆனா இந்த பட்டன் மட்டும் எதுக்குன்னு தெரியலை...''

''வீடியோ கேம் வாங்கும்போதே கடைக்காரன்கிட்டே கேட்டிருக்க வேண்டியதுதானே...''

''இது வாங்கினதில்லை அங்கிள் அங்கிள்... வழியில கிடைச்சுது...''

''வழியில கிடைச்சுதா... எங்கே...?''

''ரோட்டோரமா...''

தியாகு அந்த பட்டனின் மேல் விரலை வைத்தான்.

அழுத்தினான்.

அது நான்காவது தடவை.

## 24

'மெய்ன்டனென்ஸ்' என்று ஆங்கிலத்திலும் - இந்தியிலும் அறிவிப்பு தெரிந்த - ஏர்ஃபோர்ட்டின்... ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த அறைக்குள் நுழைந்தான் விவேக்.

மேஜையின் மேல் - ஒரு பெரிய சார்ட்டைப் பரப்பி வைத்துக்கொண்டு ஸ்கெட்ச் போனாவால் எதையோ 'ரவுண்ட் அப்' செய்து கொண்டிருந்த குரு திரும்பினான். லேசாய் முகம் மாறினான்.

''வா...வாங்க... ஸார்...''

''உங்க பேர்தானே குரு?''

''ஆ...ஆமா... ஸார்...''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்...'' சொல்லிக்கொண்டே குருவை நெருக்கமாய் நெருங்கி நின்றான் விவேக்.

''எ... என்ன பேசணும் ஸார்...''

''கோல்டன் ஹெவன் ஃபிளைட் மெயின்டனென்ஸை கவனிச்ச நபர்கள்ல நீங்களும் ஒருத்தர்... இல்லையா...?''

''ஆ... ஆமா... ஸார்...''

''வெடிகுண்டு புரளியைப் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''அ... அது... மாசத்துல... நாலைஞ்சு தடவை வ... வர்ற புரளிதான் ஸார்... அது... எங்களுக்கெல்லாம்... அது... பழகிப்போச்சு...''

விவேக் புன்னகையோடு குருவைப் பார்த்தான்.

''உங்க நேச்சர் ஆப் ஜாப் எப்படி?''

''நீ... நீங்க கே...கேக்கிறது எ...எனக்கு... புரியலை ஸார்...''

''ஃபிளைட் ரன்வேக்கு வர்றதுக்கு முன்னாடி... அதை டெமஸ்டிக் ஏரியாவுக்குக் கொண்டு போவீங்க இல்லையா?''

''ஆமா... ஸார்...''

''ஃபிளைட் டொமஸ்டிக்குக்கு வந்த பின்னாடி அந்த ஃபிளைட்ல என்னென்ன வேலையெல்லாம் பார்ப்பீங்க?''

குரு மிரண்டான்.

''எதுக்காக... இதையெல்லாம் கேக்கறீங்க ஸார்...?''

''சும்மா தெரிஞ்சுக்கத்தான்... சொல்றீங்களா?''

குரு சில விநாடிகள் திணறிவிட்டு சொன்னான். ''ஸார்... ஃபிளைட்டோட முக்கியமான கேந்திரங்களை இயக்கி டெஸ்ட் பண்ணிப் பார்ப்போம். எயிலிரான்கள் மூவ்மெண்ட்ஸ் செக் பண்ணுவோம். அப்புறம்...''

''டாய்லெட் ரூம் க்ளீனிங்கெல்லாம் யார் செய்வாங்க?''



''அதுக்கு தனியா ஸ்கேவன்ஜர்ஸ் இருக்காங்க...''

''கோல்டன் ஹெவன் ஃபிளைட்ல டாய்லெட் ரூம்களை க்ளீன் பண்ணினது யாரு...?''

''ஸ்கேவன்ஜர்ஸ்தான்...''

''உங்க மெயின்டனென்ஸ் க்ரூப் உள்ளே நுழையலையா?''

''இல்ல... ஸார்...''

''பின்னே எப்படி... உங்க உடம்பிலேயும் சரி... காசிம் உடம்பிலேயும் சரி 'ஓடோனில்' வாசனை அடிக்குது?''

''ஸார்...''

விவேக் அகலமாய் புன்னகைத்தான். ''காசிம் பர்மிஷன் ஸ்லிப்பில் கையெழுத்து வாங்க சௌத்ரிகிட்டே வரும்போதே - அவர் உடம்பிலிருந்து வீசின 'ஓடோனில்' வாசனையை மோப்பம் பிடிச்சேன். ஒரு மெயின்டனென்ஸ் அஸிஸ்டெண்ட் உடம்புல பாத்ரூமுக்குத் தேவையான ஓடோனில் வாசம் வரக் காரணம் என்னான்னு யோசிச்சேன். ஏதோ தப்பு இருக்கிற மாதிரி மனசுக்குப் பட்டது. காசிம் வெளியே போனதும் - அடுத்த நிமிஷமே நானும் கோகுல்நாத்தும் லௌஞ்சுக்கு வந்தோம். காசிமை ஃபாலோ பண்ணச் சொல்லி கோகுல் நாத்துக்கு இன்ஸ்ட்ரக்ஷன் குடுத்துட்டு - என்கொய்ரியில் மெயின்டனென்ஸ் டிபார்ட்மெண்ட் நபர்களைப் பத்தி விசாரிச்சேன். உங்க பேரைச் சொன்னாங்க... வந்தேன். வந்தா... உங்க உடம்பிலேயும் அதே ஓடோனில் வாசனை. இதுக்கு என்ன காரணத்தைச் சொல்லப் போறீங்க குரு?''

''ஸ... ஸார்...''

விவேக் மெல்ல நடந்து போய் - அறைக் கதவைத் தாழிட்டான். பேண்ட் பாக்கெட்டுக்குள்

கையை நுழைத்து - அந்த பிஸ்டலை எடுத்துக்கொண்டு மூக்கைச் சொறிந்தான். சொன்னான். ''குரு! மனுஷ முகங்களை எனக்குப் படிக்கத் தெரியும். சௌத்ரியை நான் படிச்சேன். மனுஷன் உள்ளுக்குள்ளே பதட்டமாயிருந்தார். ஃபேன் காத்துக்கு நடுவிலேயும் வியர்த்து வழிஞ்சார். பர்மிஷன் ஸ்லிப்பில் கையெழுத்து வாங்க வந்த காசிம் புறப்படும்போது கண்களாலேயே மறைமுகமா எதையோ சொன்னார். எம்மனசுக்குள்ளே சந்தேக நிழல்: சௌத்ரி மெயின்டனென்ஸ் ஆபீஸராய் இருந்து டெல்லி ஏர்ஃபோர்ட்டிலும் சில வருஷங்களுக்கு முன்னால் ஒரு விமான விபத்து நடந்திருக்கிற உண்மை மிஸ்டர் ஷெனாய் பேசும்போது வெளியே வந்தது. இத்தனையையும் கூட்டிக் கழிச்சுப் பார்க்கும்போது - இந்த டைனமைட் விவகாரம் உங்க மூணு பேர்க்கும் தெரியாமே... இருக்க வாய்ப்பே இல்லைன்னு எம்மனசுக்குப் பட்டது. நீங்க உண்மையை ஒத்துக்கிட்டா... இந்த ரிவால்வர் உங்களை விட்டுடும்... உண்மையை ஒத்துக்காமே போற பட்சத்துல... இது தன்னோட சுய ரூபத்தைக் காட்டும்...''

''ஸ...ஸார்...'' - குரு தெப்பமாய் வியர்த்தான்.

விவேக் மரியாதையை குறைத்துக் கொண்டான். ''நீயாக உண்மையை ஒத்துக்கிட்டா தண்டனையும் கம்மி... நானாக உண்மையை கண்டுபிடிச்சு... கோர்ட்டுக்குக் கொண்டு போனா... ஆயுள் தண்டனை வரைக்கும் போகலாம்!... என்ன சொல்றே?''

''ஸ...ஸார்...''

''ம்... சொல்லு...''

''எ... எனக்கு... ஒண்ணும் தெரியாது ஸார்...''

விவேக் பிஸ்டலோடு அவனை நெருங்கி - இடது கையால் அவன் தலைமுடியைப் பற்றி - தலையைப் பின்னுக்குச் சாய்த்தான்.

''வாயைத் திற...''



குரு திறந்தான்.

திறந்த வாய்க்குள் - பிஸ்டலின் வாயைத் திணித்தான் விவேக்.

''இப்போ... ட்ரிக்கரை சுண்டினா போதும்... கல்லீரல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், இருதயம் எல்லாமே... கொத்துக்கறியாயிடும்... மரியாதையா உண்மையை ஒத்துக்கிட்டா... உன்னை கோர்ட்ல அப்பரூவரா மாத்தி - உனக்கு தண்டனையே இல்லாமே பண்றேன். உனக்கு கல்யாணமாயிடுச்சா...?''

''ம்...ம்...''

''உம் பெண்டாட்டி மஞ்சள் தேய்ச்சு குளிச்சு - குங்குமப் பொட்டு வெச்சுக்கணும்ன்னு நீ ஆசைப்பட்டா... உண்மையைச் சொல்லு...''

சொல்றேன் என்பது போல் தலையாட்டினான் குரு. குருவின் வாய்க்குள்ளிருந்து பிஸ்டலை உருவினான் விவேக்.



## 25

''இந்த பட்டன் எதுக்குன்னே தெரியலையே?'' - தியாகு அந்த வீடியோ கேமை ரவிப்ரகாஷிடம் கொடுத்தான்.

''என்ன... அங்கிள்... உங்களுக்குமா தெரியலை?''

''தெரியலையே...?''

கணேசன் திரும்பினான். ''டேய் ரவி! ஏண்டா இப்படிப் படுத்தறே? அந்த வீடியோ கேமைத் தூக்கி வெளியே எறியறேன் பார்... உடம்பு சரியில்லாத அந்த மாமாவைப் போய் சும்மா தொணதொணக்காதே...?''

தியாகு சிரித்தான். ''பரவாயில்லை... விடுங்க ஸார்,... குழந்தைதானே...?''

''இவன் சரியான வாயரட்டை ஸார்... இவனுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தாப் போதும்... தலைக்கு மேல ஏறிடுவான்... இவனுக்குக்னு ரோட்டோரமா... எவன்தான் போட்டு வெச்சிருந்தானோ இந்த வீடியோ கேமை... கிடைச்ச நிமிஷத்திலிருந்து - இந்த பட்டன் எதுக்கு எதுக்குன்னுச் சொல்லி உயிரை வாங்கிட்டான் ஸார்...''

தியாகுவுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த தாரிகா சிரித்துக் கொண்டே கையை நீட்டினாள்.

''எங்கே... அந்த வீடியோ கேமைக் குடு.... நான் பார்க்கிறேன்...

ரவிப்பிரகாஷ் கொடுத்தான்.

''எந்த பட்டன்?''

''இதான்...'' என்றான் ரவிப்ரகாஷ்.

## 26

குரு வியர்த்து வழிந்து கொண்டு - எல்லா உண்மைகளையும் கொட்ட - விவேக் பதட்டப் பட்டான். வேகமான குரலில் கேட்டான்.

''பிளஷ் அவுட் ஸிங்க் குழாய்க்குள்ளே அந்த டைன்மைட்டை ஃபிக்ஸ் பண்ணியிருக் கீங்களா?''

''ஆமா... ஸார்...''

''அதை வெடிக்க வைப்பதற்கான 'ரிமோட் கண்ட்ரோலை' கிரிக்கெட்டியர் வீடியோ கேமில் திரிவேதி செட் பண்ணியிருந்தார். இப்போ அவர் ஆக்ஸிடெண்டில் இறந்திட்டார். ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டிலிருந்து வீடியோ கேமை எடுத்திட்டு வர்றதுக்காக காசிம் போயிருக்கான்.''

''ஆமா... ஸார்...''

''அந்த வீடியோ கேமில் செட் பண்ணி யிருக்கிற பட்டனை அஞ்சு தடவை அழுத்தினா...



ஃபிளைட்டில் பொருத்தப்பட்டிருக்கிற டைனமைட் வெடிச்சிடும்... இல்லையா...?'' சொல்லிக்கொண்டே போன விவேக் - சட்டென்று உதடுகள் ஸ்தம்பித்தான்.

சில நிமிஷங்களுக்கு முன்னால் -

பிளைட்டில் கேட்ட அந்தக் குரல்.

''அங்கிள்! உங்களுக்கு இந்த கிரிக்கெட்டியர் வீடியோ கேம் தெரியுமா? இதுல இந்த பட்டன் எதுக்காக வெச்சிருக்காங்கன்னு...''

விவேக் குருவை மறந்தான்.

தாழிட்ட கதவைத் திறந்துகொண்டு - வெளியே வந்து ரன்வேயில் பாய்ந்தான்.

தொலைவில் கோல்டன் ஹெவன் நின்றிருந்தது.

'கடவுளே!'

'அந்த பட்டனை பையன் அழுத்தாமல் இருக்க வேண்டும்!'

விவேக் ஓடினான்.

''தப்... தப்...''

இருநூறு மீட்டர் தூரம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது.

150... 140... 130... 120...

விவேக் சகலத்திலும் மூச்சு வாங்கிக் கொண்டு - மூர்க்கமாய் ஓட - கோல்டன் ஹெவன் நூறு மீட்டர் தூரத்தில் சமீபித்தது.

'கடவுளே! ஏதும் ஆகிவிடக் கூடாது.'

'ஏராளமான ஆசைகளோடும் கனவுகளோடும் மொத்தம் முன்னூற்றி இருபது பிரயாணிகள்!'

அவர்களைக் காப்பாற்றியே ஆக வேண்டும்!

லௌன்ஞ்சில் இருந்த ஜனங்கள் கொத்துக் கொத்தாய் நின்று வேடிக்கைப் பார்க்க - விவேக் ஓடினான்.

75 மீட்டர்... 60... 50... 40... 30... 20... 10...

விமானத்தின் இடுப்போடு ஒட்டியிருந்த - ஸ்டேர்ஸின் மேல் பாய்ந்து - தபதபவென்று ஏறி - நின்றிருந்த ஏர் ஸோஸ்டஸ்களைத் தள்ளிக் கொண்டு - ஃபிளைட்டுக்குள் நுழைந்தான்.

## 27

"இந்த பட்டனா?"

கேட்ட தாரிகாவுக்கு தலையசைத்தான் ரவிப்ரகாஷ். "ஆமா... ஆன்ட்டி..."

தாரிகா பார்த்தாள். "மத்த பட்டன்களைவிட - இது பெரிசா இருக்கிறதுனால..." சொல்லிக் கொண்டிருந்த அதே விநாடி -

பின்னால் ஏதோ சத்தம் கேட்டது.

தாரிகா திரும்பிப் பார்க்க -

விவேக் புயல் மாதிரி வந்து கொண்டிருந் தான்.

"வேர்... ஈஸ் தட்... லிட்டில் சேப்...?"

ரவிப்ரகாஷ் அவன் கண்ணுக்குக் கிடைக்க - ஆர்வமாய் அள்ளினான். வீறிட்ட குரலில் கேட்டான். "தம்பி... அந்த வீடியோ கேம்... எங்கே...?"

பையன் மிரண்டு போய் - தாரிகாவைக் காட்ட -

அவள் கையிலிருந்த வீடியோ கேமைப் பறித்துக்கொண்டு - பெரிது பெரிதாய் நிம்மதிப் பெருமூச்சுகளை விட்டான் விவேக்.

## 28

இரண்டு மணி நேரம் கழித்து -



பத்திரிகை நிருபர்களுக்கு மத்தியில் சிக்கியிருந்தான் விவேக். சுற்றிலும் ஃபிளாஷ் காமிராக்கள். வீடியோ காமிராக்களின் உஷ்ண மான வெளிச்சங்கள். கேள்விகள் நாலா பக்கமிருந்தும் - வேகவேகமாய் வந்து விழுந்து கொண்டிருந்தன.

"சௌத்ரி குற்றத்தை ஒப்புக் கொண்டாரா?"

"ஒப்புக் கொள்ளாமல் வேறு வழி? கோல்டன் ஹெவன் டாய்லட் ரூமுக்கு கூட்டிப்போய் - அவர் முன்னிலையிலேயே காசிமையும், குருவையும் பிளஷ் அவுட் ஸிங்க் குழாய்க்குள் பொருத்தி யிருந்த டைனமைட்டை வெளியே எடுக்கச் செய்தோம்."

"இதற்குப் பின்னணியாக செயல்பட்டவர் கள் யார் என்பதை கண்டுபிடித்து விட்டீர்களா?"

"பேஷாய்! அரை மணி நேர தீவிர 'அன்பான' விசாரணைக்குப் பின் சௌத்ரி அந்த பார்ட்டியைக் காட்டிக் கொடுத்தார்.

"அதை வெளியே சொல்லலாமில்லையா?"

"தாராளமாய்! போஸ்டர் அடித்தே ஒட்டலாம். ஆக்டர் சூரியகலாதரனை ஹீரோவாகப் போட்டு - வெளிநாட்டில் போய் படம் எடுக்கும் ப்ரொட்யூஸர் நிர்மல் கோஷுக்கு ஒரு தம்பி. அவன் பேர் அஜய் கோஷ். அவனும் ஒரு ப்ரொட்யூஸர்தான். சென்ற இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை 'கோஷ் பிரதர்ஸ்' என்கிற பேனரில் தமிழ் இந்திப் படங்களைத் தயாரித்து வெளியிட்டுக் கொண்டிருந்த அந்த நிர்மல் கோஷுக்கும், அஜய் கோஷுக்கும் ஏதோ ஒரு கருத்து வேறுபாடு காரணமாய் பிரிவு. அதற்குப் பிறகு இருவருமே தனித்தனி பேனர்களில் படங்களைத் தயாரித்து வெளியே விட்டார்கள். நிர்மல் கோஷின் படங்கள் வெள்ளி விழாக்களைப் பார்க்க - அஜய் கோஷின் படங்கள் டப்பாவுக்குள் சுருண்டன. கடைசி பட்சமாய் - இந்த ஃபீல்டில் நிலைத்து நிற்பதற்கு சூப்பர் ஸ்டார் சூர்யகலாதரனை வைத்துப்

படமெடுக்க முடிவு செய்து - அவரிடம் கால்ஷீட்டுக்காக போயிருக்கான் அஜய் கோஷ். ஆனால் நிர்மல் கோஷ் ஏற்கனவே சூர்ய கலாதரனை புக் செய்து - மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாய் கால்ஷீட் வாங்கியிருந்தார். அஜய் கோஷின் மனதில் அந்த நிமிடம் பற்றிக் கொண்ட பொறாமைத் தீதான் இவ்வளவு பெரிய விபரீதத்திற்குக் காரணம். ஏறக்குறைய இருநூறு பேர்கள் அடங்கிய நிர்மல் கோஷின் படப்பிடிப்புக் குழுவினரையும், நிர்மல் கோஷையும், சூர்ய கலாதரனையும் தீர்த்துக் கட்டத்தான் - சௌத்ரியோட உதவியை நாடியிருக்கான். அஜய் கோஷ் அடிக்கடி விமான பயணங்களை மேற்கொள்கிற நபராதலால் - சௌத்ரிக்கும் அவனுக்கும் மத்தியில் ஏற்கனவே ஒரு ஃப்ரெண்ட்ஷிப் இருந்திருக்கிறது.''

ஒரு நிருபர் கேட்டார்.

''டைனமைட்டை செட் செய்த திரிவேதி மட்டும் கார் ஆக்ஸிடெண்டில் மாட்டாமல் இருந்தால் – இந்த 'கோல்டன் ஹெவன்' விமான விபத்தைத் தவிர்த்திருக்க முடியாதல்லவா?''

கோகுல்நாத் குறுக்கிட்டுப் பதில் சொன்னார்.

''விவேக் என்றைக்குமே வெற்றிகளைச் சந்திப்பவர்; சந்தித்துக் கொண்டிருப்பவர். திரிவேதி விபத்தில் மாட்டாமல் இருந்திருந்தால் - இந்த கேஸை வேறு கோணத்திலிருந்து பார்த்து - இந்த விமான விபத்தைத் தடுத்திருப்பார்.''

அவர் சொன்ன வாக்கியம் 'சரிதான்' என்று சொல்வது போல் ஏராளமான ஃபிளாஷ் காமிராக்கள் - கண்களைச் சிமிட்டி சிமிட்டி விவேக்கின் முகத்தை பல கோணங்களில் ஒற்ற ஆரம்பித்தன.

ரன்வேயில் 'கோல்டன் ஹெவன்' போயிங் 707 - சிங்கப்பூர்க்கு பத்திரமாய் புறப்பட்டுப் போக - நிமிஷங்களை எண்ணிக் கொண்டிருந்தது.

(முற்றும்)



## புதுக்கவிதை

இரும்பு
அன்பே
உனக்கு நான்
துரும்பாக இருந்தாலும்
கரும்பாக இருக்கவே
விரும்புகிறேன்.
என்றைக்காவது
ஒரு நாள்
உனது...
காந்தப்பார்வையால்
கவரப்படலாம்
என்ற
காத்திருப்பலோ?

செல்வராஜா
சேலம்-8.

## முகவரி!

தோல்வியின்
முகவரி... நம்
தவறான முடிவுகளில்!
அனுபவத்தின்
முகவரி... நம்
தவறான செயல்களில்!
வெற்றியின் முகவரி...
நம் உன்னத உழைப்புதனில்!
சாதனையின் முகவரி...
நம் பொறுமையான
குணம்தனில்!